SAPTHAGIRI (TAMIL)
ILLUSTRATED MONTHLY
Volume: 01, Issue: 02
September-2021, Price Rs.5/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

## சமய மாத இதழ்

செப்டம்பர் 2021, விலை ரூ.5/-



நமஸ்தே தேவதேவச
வராஹ வதனாஉச்யுத |
க்ஷீரஸாகரஸம்காச
வஜ்ரச்ருங்க மஹாபுஜ ||



# திருமலையப்ப ஸ்வாமி
## வருடாந்திர பிரம்மோத்ஸவம்
### 2021 அக்டோபர் 07 முதல் 15 வரை

**07-10-2021**
வியாழக்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**08-10-2021**
வெள்ளிக்கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ச வாகனம்

**09-10-2021**
சனிக்கிழமை
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**10-10-2021**
ஞாயிற்றுக்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**11-10-2021**
திங்கட் கிழமை
பகல் : மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**12-10-2021**
செவ்வாய்க்கிழமை
பகல் : அனுமத் வாகனம்
இரவு : யானை வாகனம்

**13-10-2021**
புதன் கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**14-10-2021**
வியாழக்கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**15-10-2021**
வெள்ளிக்கிழமை
பகல் : சக்கரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



*தத்ராபச்யத்ஸ்தி$_2$தாந் பார்த$_2$:*
*பித்ரூநத$_2$ பிதாமஹாந் ।*
*ஆசார்யாந்மாதுலாந் ப்$_4$ராத்ரூந்*
*புத்ராந் பௌத்ராந் ஸகீ$_2$ம்ஸ்தத$_2$ா ॥*
*ச்வசுராந் ஸுஹ்ருத$_3$ச்சைவ*
*ஸேநயோருப$_4$யோரபி ।*

**இதற்குப் பிறகு, பிருதையின் (குந்தியின்) குமாரனான அர்ஜுனன் அங்கு இரண்டு படைகளிலேயும் நிற்கின்ற பெரியப்பா – சிற்றப்பாக்களையும், தாத்தா– முப்பாட்டனார்களையும், குருநாதர்களையும், தாய்மாமன்களையும், சகோதரர்களையும், புதல்வர்களையும், பேரன்களையும் மற்றும் நண்பர்களையும், மாமனார்களையும், அன்பர்களையும் பார்த்தார்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–26,27*

*பக்கத் கௌரவ பட்டண ப்ரப்ருதய:*
*ப்ராஸ்த ப்ரலம்பாதய:*
*தாலாங்கஸ்ய ததாவிதா விஹ்ருதயஸ்*
*தந்வந்து பத்ராணி ந: ।*
*க்ஷீரம் சர்க்கரயேவ யாபி ரப்ருதக்*
*பூதா: ப்ரபூதைர் குணை:*
*ஆகௌமாரக மஸ்வதந்த ஜகதே*
*க்ருஷ்ணஸ்ய தா: கேளய: ॥*

**எந்த பலராமனுடைய லீலைகளாலே சருக்கரை கலந்த பால்போல் இளம்பருவம் தொடங்கி பிரியாமல் கலந்தனவான கண்ணனுடைய அந்த லீலைகள் மிக அதிகமான குணங்களால் உலகுக்கு சுவைமிக்கு இருந்தனவோ. அத்தகைய பலராமன் கௌரவர்களின் நகரம் முதலியவற்றைக் கவிழ்த்தனவாய், பிரலம்பாசுரன் முதலியவர்களை ஒழித்தனவாய், இன்னும் அத்தகையனவான பலராமனுடைய லீலைகள் நமக்கு நன்மைகளை செய்ய வேண்டும்.**

*- ஸ்ரீ தசாவதார ஸ்தோத்ரம்*





திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை"

*"மானிட சேவையே மாதவன் சேவை" எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி. தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943–ஆம் ஆண்டு ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஸ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாண மஸ்து திட்டம், ஸ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை" யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

## திட்டத்தின் நோக்கங்கள் :

1) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி, இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.

2) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம்படுத்துவது, குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர்ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.

3) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங்களின் போதும், தீப்பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போதும் விரைவான உதவிகளை மேற்கொள்ளுதல்.

4) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக்கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.

5) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.

6) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வசதியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சாயத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர்வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதிநவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம்பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.

8) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை வளர்த்து இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.

9) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மணமக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.

10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.

11) மேலே விவரித்த இலட்சிய சாதனங்களில் இலாபம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் பார்ப்பது.

## ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை நன்கொடையாளர்களுக்கு :

1) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-

2) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்விதத் தகவலும் இன்றி ஸ்ரீவாரி உண்டிக்கணக்கில் செலுத்தப்படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்குபவர்கள் - "செயலாட்சித் தலைவர், ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயரில் காசோலை / வங்கி கேட்பு வரைவோலையை "பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி - 517 507" எனும் முகவரிக்கு அனுப்பவும்.




வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

செப்டம்பர் 2021

மலர் 01

இதழ் 02



சிறப்பு ஆசிரியர் :
Dr. K.S. ஜவஹர் ரெட்டி, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்),
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| திருவேங்கடமலை வராஹப் பெருமாளும் எம்பெருமானாரும் - கீர்த்திமூர்த்தி. உ.வே.தி.அ. கிருஷ்ணமாசாரிய ஸ்வாமி, திருப்பதி. | 7 |
| வந்தருள் புரியும் மஹாகணபதி -திருமதி. கே.சுப்புலெட்சுமி, பரமகுடி. | 10 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம் : திருமலையப்பனும் திருவரங்கநாதனும் - பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 12 |
| தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன் - திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி. | 15 |
| ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் : ஸத்யவாக்யன் - திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை. | 18 |
| புன்னகை வாழ்வை தரும் புரட்டாசி சனிக்கிழமை - திரு. ஜி.வேலாயுதம், சேலம். | 21 |
| மானுடவியல் சார்ந்த கிரக சாஸ்திரம் -முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, திருவல்லிக்கேணி. | 24 |
| ஆழ்வார்கள் அநுபவித்த வாமன அவதாரம் - திரு. ஆர். கண்ணன், பெங்களூர். | 31 |
| யோக சாஸ்திரம் : பதஞ்சலியின் ஆரோக்கிய ஆசனங்கள் - டாக்டர் கி.ஜ. நிகிலாவெங்கட், கோயம்பத்தூர். | 34 |
| பூர்வாசார்ய ஸ்தோத்ரங்கள் : கோதா சதுச்லோகீ - உ.வே. டாக்டர். அனந்தபத்மநாபாசாரியார் ஸ்வாமி, சென்னை. | 36 |
| 108 திவ்யதேச வைபவம் – திருவனந்தபுரம் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 38 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் - உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 41 |
| ஆயுர்வேதம் : கருவேலம் - திருமதி உஷா, திருப்பதி. | 44 |
| ஸ்ரீமத் பகவத்கீதை - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 46 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : சந்தனு மகாராஜன் - திரு. சத்யதாரா, சென்னை. | 48 |
| நீதிக்கதைகள் : தெய்வச் செயலின் சிறப்பு - திருமதி பிரேமாவரதன், புதுதில்லி. | 51 |
| சித்திரக்கதை : ஸ்ரீவாமன திருஅவதாரம் | 52 |


**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : ஸ்ரீபூவராஹ ஸ்வாமி, திருமலை.

பின்னட்டை : ஸ்ரீபத்மாவதி தாயார் (உற்சவர்), திருச்சானூர்.

# வேதமே உலக தர்மத்தின் மூலம்

வேதம் என்பதற்கு அறிவு, ஞானம் என்றும் பொருள் கூறுவர். வேதங்கள் மானிட வர்க்கத்திற்கு தேவையான ஆழ்ந்த, நுண்ணிய கருத்துக்களை கூறுகின்றன. *"வேதோ உகிலோ தர்ம மூலம்"* அதாவது "அனைத்து தர்மங்களுக்கும் மூலம் வேதம்தான். எல்லா காலத்துக்கும் பொதுவான சாத்வத தர்மங்களை கூறுவது வேதம் தான்" என்று மனு கூறுகின்றார். நம்மில் பலரும் ஏதாவது நல்லனவற்றை கூறினால், "அது என்ன வேதவாக்கா?" என்று கேட்போம். அதாவது வேதவாக்கு என்றாலே எதிர்கேள்வி கேட்காமல் அதன்படியே நடத்தல் வேண்டும் என மக்கள் நம்பி வந்ததினால் தான் "வேத வாக்கா?" எனக் கேட்கப்படுகிறது. கௌதமர், பராசரர் போன்ற ஸ்மிருதி படைப்பாளிகளும் இவ்வாக்கியத்தையே உச்சரித்தனர்.

நம் சனாதன தர்மமனைத்திற்கும் மூலம் வேதமேயாகும். இதனை ஆதாரமாகக் கொண்டே தர்ம சாஸ்திரங்கள் (ஸ்மிரிதிகள்), புராணங்கள், இதிகாசங்கள் தோன்றின. மேலும், காவியநாடகம், சங்கீதம், நாட்டியக் கலைகள், மருத்துவ கல்விகளும் வேதத்தினையே ஆதாரமாகக் கொண்டு ஏற்பட்டன.

வேதம் கற்பித்தல் முறைக்காக எழுத்து வடிவில், நூல் வடிவில் பகுப்பாய்வு செய்தும், வாழ்க்கையையே அர்ப்பணித்தும் ஒரு பிரிவினர் தலைமுறை தலைமுறைகளாக பாதுகாத்து வருகின்றனர். இப்பொறுப்பினை அவர்கள் ஏற்றாலும் வேதம் கூறுகின்ற தர்மங்களை சாதாரண மானிடர்களிடம் சேர்ப்பிப்பதற்காக மகரிஷிகள் ஸ்மிருதிகளையும், புராணங்களையும் படைத்தனர். இவற்றோடு ஆகம சாஸ்திரங்களும், மந்திர சாஸ்திரங்களும் கூட வேதங்களின் மூலமாகவே தோன்றின.

*"வேதவேத்யே பரே பும்சி ஜாதே தசரதாத்மஜே வேத: ப்ராசேதஸாதாஸீத் சாக்ஷாத் ராமாயணாத்மநா"* வேதத்தினால் அறியப்பட வேண்டிய பரம புருஷன் ஸ்ரீராமனாக தசரதனுக்கு மகனாகப் பிறந்தார். வேதமும் வால்மீகியன் குழந்தையாக ராமாயணமாகத் தோன்றியது என மேற்கண்ட சுலோகம் கூறுகின்றது. *"ராமாயணம் வேத ஸமம்"* ராமாயணம் வேதத்திற்கு நிகரானது என்பது ராமாயணத்தில் உள்ள வாக்கியம்.

*"ஸர்வ வேத:"* என்று கடோபநிஷத்தில் கூறுவது போன்று, ஸ்ரீகிருஷ்ண பகவான் கீதையில் *"வேதச்ச ஸர்வை: அஹம் ஏவ வேத்ய"* என்று எல்லா வேதங்களாலும் நான் அறியப்படுகிறேன்" என்கிறார்.

மகாபாரதத்தை ஐந்தாம் வேதம் என்கிறோம். பாகவதமோ *"நிகம கல்பதரோர்கலிதம் பலம்"* வேதமெனும் கற்பகத்தருவிலிருந்து தவறிவிழுந்த பழம் என்று விவரிக்கின்றன. *"இதிகாச புராணாப்யாம் வேதம் சமுபப் ரும்ஹயேத்"* இதிகாச புராணங்கள் வாயிலாக சிறப்பாக பரப்பப்பட்டது வேதம். சித்தாந்தங்கள் வடிவில் கூடிய தர்மங்களை காட்சி வடிவில் விளக்கி அளிப்பதற்காக புராண இதிகாசங்கள் தோன்றின.

நாட்டியம், சங்கீதமும் கூட "சதுர்வேத சமுத்பவம்" என்று கூறப்படுகின்றன. சங்கீத சக்ரவர்த்திகளில் ஒருவரான தியாகராஜ பாகவதர் கூட சங்கீதத்தை "சாமவேத ஜனிதம்" என்றே அழைக்கிறார்.

நம் நாடு பண்டைய காலம் தொட்டே வேத பூமியாகும். வேத மந்திரங்களிலிருந்து துவங்கி, நாட்டுப்புறப் பாடல்கள் வரை விரிவடைந்துள்ள தர்மம் நம்முடையதாகும். இந்த எல்லையற்ற வரம்பினால்தான் நம் சனாதன தர்ம விருக்ஷம் பரந்து விரிந்துள்ளது.

இந்த விருக்ஷத்தில் உள்ள கிளைகளுக்கும், தளிர்களுக்கும், பூக்களுக்கும், அனைத்திற்கும் வேத தர்மம் மூலமாகும். இதனுடன் இருந்து கொண்டு மரத்தினை அழிக்கக்கூடிய சீடப்புழுக்களை புத்திசாலித்தனமாக கண்டறிந்து விலக்குவது போல் நாமும் தீயவற்றிடமிருந்து விலகியிருத்தல் வேண்டும்.

வேதசாஸ்திரங்களை பாதுகாப்போம்! மானிட சமுதாயத்தை காப்போம்!!

# திருவேங்கடமலை வராஹப் பெருமானும் எம்பெருமானாரும்

**கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.**
**தி.அ. கிருஷ்ணமாசாரிய ஸ்வாமி,**
**திருப்பதி.**

*ஸ்ரீவேங்கட வராஹாய*
*ஸ்வாமி புஷ்கரிணீ தடே!*

*ச்ரவணர்க்ஷே துலாமாஸே*
*ப்ராதுர்ப்பூதாத்மநே நம:!*

திருவேங்கட மலையில் ஸ்வாமி புஷ்கரிணியின் கரையின் கண் ஐப்பசி மாதத் திருவோண நன்னாளில் தோன்றிய திருமேனியுடைய வராகப் பெருமாளுக்கு வணக்கம் – என்று பிரசித்தி பெற்ற திருமலை வராகப்பிரானது வரலாறு திருமலை அநந்தாழ்வான் அருளிய ஸ்ரீவேங்கடாசலேதிகாச மாலை என்னும் நூலை அனுசரித்து எழுதப்படுகிறது.

பாத்மபுராணப் பகுதியில் உள்ள 29 என்னும் எண் குறித்த ஆறாமத்யாயத்தில், “பொற்குடங்களிலிருந்து தொடர்ந்து இடைவிடாமல் பெருகுகின்ற பசும் பாலினால் அரசன் புற்றினுடைய துவாரத்தின் உட்பகுதியை அபிஷேகம் செய்யத் தொடங்கினான். அங்ஙனம் செய்து கொண்டிருக்கையில் அப்புற்றின் உட்பகுதியில் இருந்து பூஜிக்கத்தக்க வராக உருக்கொண்ட பெருமான் தோன்றினார் என்றது முதலாகக் கூறப்பட்ட பெருமையை உடையவரும், இங்ஙனமே பெரும்பாலும் வேங்கடாசல மகாத்மியத்தைக் கூறுகின்ற புராணப் பகுதிகள் அனைத்திலும் கூறப்பட்டு மிகவும் பிரசித்தயான வைபவத்தை உடையவரும், ஸ்ரீஸ்வாமி புஷ்கரணியின் மேற்கு கரையில் விளங்குபவருமான இவ்வராகப் பெருமாள் ஸ்ரீநிவாச பகவானுக்கு முன்னமே திருவேங்கடமலைக்கு வந்து எழுந்தருளி இருந்த போதிலும், ஸ்ரீநிவாசப் பெருமாளுக்கு இதற்கு முன்பு பிரமன் முதலியோர்களால் பிரபலமாகப் பிரம்மோத்ஸவம் முதலியன நடத்தி வைக்கப் பட்டமை புராணங்களில் அறியப்படுவதனாலும், இப்போதும் அப்பெருமானுக்கே பிரம்மோத்ஸவாதிகள் செய்விக்கப்பட்டு வருவதனாலும், அவருடைய உத்ஸவங்களை குறைத்தல் தகாது. மேலும் ஸ்ரீவைகாநஸாநந்த ஸம்ஹிதையில் ”பலிசாதிக்கப்படுகின்ற ஒரு வீதியின் நடுவிலுள்ள இரு தேவதைகளில் ஒரு தேவதையை பலி ஹோமமில்லாமல் அமுக்கியமாகப் பூஜிக்க வேண்டும். உத்ஸவாதிகள் நடத்தக்கூடாது” என்றுள்ள வசனத்தினால், ஒரு தலத்தில் பலிபூஜை நடைபெறும் நான்கு வீதிகளின் நடுவில் எழுந்தருளியுள்ள பெருமான்கள் இருவருக்கும் சமமான முக்கியத்துவம் கொடுத்து பலிபீடார்ச்சனம், நித்யஹோமம், பிரம்மோத்ஸவம் முதலியன செய்யக் கூடாது என்றும், இருவரில் ஒருவரை அமுக்கியராக ஆக்கி பலி ஹோமங்களில்லாமல் நித்ய பூஜை மட்டும் செய்ய வேண்டுமென்றும் அறியப்படுகிறது. ஆகையால் இவ்வராகப் பிரானுக்கு பலிபீட பூஜை, நித்ய ஹோமம், பிரம்மோத்ஸவம் இவையின்றி முச்சந்திகளிலும் பூஜை மாத்திரம் செய்யப்பட வேண்டுமென்றும் பகவத் ராமாநுஜர் நியமித்து அருளினார். அங்ஙனம் வராகப் பெருமானுக்குச் செய்யப்







படுகின்ற பூஜையும், ஸ்ரீநிவாஸப் பெருமாளுக்குப் பூஜை நடப்பதற்கு முன்பே செய்யப்பட வேண்டுமென்றும், யாத்திரை செய்யுமவர்கள் முன்பே வராக தீர்த்தத்தில் நீராடி வராக விமானத்தை வணங்க வேண்டுமென்றும் பகவத் ராமாநுஜ முனிவர் வரையறை செய்தருளினார்.இங்ஙனம் வரையறை செய்ததற்கு அத்தாட்சியும் புராணங்களிலிருந்து அவ்வெம்பெருமானார் தாமே காட்டியுள்ளார். அவற்றைக் கீழே காணலாம்.

பிரம்ம புராணம் எட்டாமத்யாயத்தில், மிக உயர்ந்த இடமான ஸத்ய லோகத்தில் இருக்கும் நான் முகக் கடவுள் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போது இப்பகுதி வராக தீர்த்தமென்னும் பெயரால் பிரசித்தி அடையப் போகிறது. இங்கு வருபவர்கள் இதன் கண் நீராடாமல் அசுத்தராய் வராகப் பெருமானை வணங்குதல் கூடாது. வராகப் பெருமானைச் சேவிப்பதற்கு முன்பு ஸ்ரீநிவாசப் பெருமாளை சேவித்தல் கூடாது. அப்படிச் செய்தால் ஸ்ரீநிவாசப் பெருமான் திருப்தி அடைய மாட்டான் என்று கூறி இப்படி ஒரு நியதியை ஏற்படுத்தினார். பின்பு அவர் ஸ்ரீநிவாசப் பெருமாளை சேவித்துப் பல வழிகளால் துதித்து அவர் திருப்பாதங்களைப் பிடித்துக் கொண்டு "திருமாலே! உமக்கும் பூஜை நடப்பதற்கு முன்பாகவே அடியேன் ஸ்தாபித்த

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# சிறார் வாக்கு

*குழந்தைகளே ... நீங்கள் எழுதுங்கள் ! பெரியோர்களே ... நீங்கள் ஊக்குவியுங்கள் !!*

**சிறுவர் சிறுமிகளிடையே நம்முடைய பண்பாட்டின் மீதும், தர்மத்தின் மீதும், புராணத்தின் மீதும், பகவானின் மீதும், பெரியோர்களின் மீதும் ஒரு நல்ல எண்ணம் ஏற்படுவதற்கும், ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதற்கும் சிறார் வாக்கு எனும் தொடர் பிரதி மாதம் ஸப்தகிரி இதழில் மலர்கிறது.**

***யாரெல்லாம் எழுதலாம்? என்ன எழுத வேண்டும்?***

பத்தாம் வகுப்பு அல்லது அதைவிடக் குறைந்த வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகள் அனைவரும் எழுதலாம். நீங்கள் படித்த கடிதங்கள், நீங்கள் கேட்ட தர்ம நீதிக்கதைகள், ஹரிகதைகள், புராணங்கள், இதிஹாசங்கள், நீதிசதகங்கள் முதலானவற்றில் உள்ள ஆன்மீகக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் கதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாகவோ அல்லது பகவான் மீது உங்களுக்கு எழும் சிந்தனையினையோ எழுதலாம்.

***பெரியோர்கள் செய்ய வேண்டியன...***

குழந்தைகளிடம் நம்முடைய புராண, இதிஹாஸங்கள் மீது நல்அறிவினை வளர்ப்பதற்கு அவர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கி, சிறிய சிறிய ஆன்மீக நூல்களை படிக்குமாறு அவர்களை ஊக்குவித்து எழுத வையுங்கள்.

***நிபந்தனைகள் :***

**படைப்பு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும். முழு விலாசம், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன், படைப்பு உங்கள் சொந்தமானது என்னும் உறுதிப்பத்திரத்தில் நீங்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியர் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். நீங்கள் படைப்பினை அனுப்பின பிறகு இறுதி முடிவு பிரதான**



*படைப்பினை அனுப்ப வேண்டிய முகவரி :*

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், கே.டி. சாலை, தி.தி. தேவஸ்தானம், திருப்பதி–517 507.

**குழந்தைகளே எழுதுங்கள்! கோவிந்தன் திருவருளை பெறுங்கள்!!**

வராகப் பெருமானுக்குத் திருமஞ்சனம், சந்தன புஷ்ப தாரணம், நைவேத்ய ஸமர்ப்பணம், தரிசனம் முதலிய பூஜை நடக்க வேண்டும் என்று வரம் வேண்டினார். திருவின் மணவாளரான ஸ்ரீநிவாசன் அப்படியே ஆகக் கடவது என்று வரமளித்து அதை அவ்வாறே நடத்தி வைத்தான்" என்றுள்ளமையும், அவ்விடத்திலேயே "வராகவுருவம் தரித்த பெருமான் ஒரு வேடனைக் குறித்து ஸ்ரீநிவாஸனுடைய தீர்த்தத்தில் (ஸ்வாமி புஷ்கரணியில்) நீராடுவதற்கு முன்பு எனது விமா னத்தை வணங்க வேண் டும்" என்று தானே கூறினார். அது முதலாக அத்தீர்த் தம் முதலில் நீராடத் தக்கதாக ஆயிற்று என்றுள்ளமையும்,



பவிஷ்யோத்தர புராணம் 5-ம் அத்யாயத்தில் ஸ்ரீநிவாசனுக்கும் ஸ்ரீவராகப் பெருமாளுக்கும் நடை பெற்ற ஸம்பாஷணையில் ஸ்ரீநிவாசன் வராகரைக் குறித்து "பூமிதேவியின் மணவாளா! இம்மலையில் எனது பாக்கியத்தினால் உம்மைக் காணலுற்றேன். இங்கேயே வசிக்க வேண்டும் என்னும் ஆசை எனக்குத் திடமாக உள்ளது. இந்த யுகம் முடியும் வரை யில் எனக்கு வசிக்க இடம் அளிக்க வேண்டுகிறேன்" என்று விண்ணப்பிக்க, அதற்கு வராகர் "என்னிடம் இருந்து விலை கொடுத்து வசிக்கும் இடத்தைப் பெற்றுக் கொள்ளும்" என்று கூறி, அது கேட்ட ஸ்ரீநிவாசன் உம்மையே எல்லோரும் முன்பு வணங்கு வர். பால் திருமஞ்சனமும் நைவேத்யமும் உமக்கே முன்பு நடைபெறும். இப்படி நான் நடத்தி வைப்ப தையே உயர்ந்த விலைப் பொருளாக ஸமர்ப்பிக் கிறேன். கருணாநிதியான பூமி தேவி நாதனே! நான் கொடுப்பதை ஏற்றுக் கொள்ளும். அப்பனே! மாதவா! தயாநிதியே! இதுவே சிறந்த விலைப் பொரு ளாகும். ஆகையால் என்னிடம் தயை புரிய வேண்டு கிறேன்" என்று மிக இனிமையாகப் பேச அதனைச் செவியுற்ற வராக பகவான் திருமகள் நாதனாய் வசிக்க இடம் கேட்கும் ஸ்ரீநிவாசப் பகவானுக்கு நூறடியளவுள்ள தலத்தைக் கொடுத்தார் என்றுள்ள மையும் அத்தாட்சியாகக் கொள்ளத்தக்கன. மேலும் எம்பெருமானார் வராகப் பெருமாளுக்கு ஒரு உத் ஸவ மூர்த்தியை நிருமாணம் செய்வித்து பிரதிஷ்டை கொண்டருளப் பண்ணி அவருக்கு ஒரு நாள் அத்ய யன உத்ஸவமும், வராக ஜயந்தியன்றும் திருமலை யில் வராகர் தோன்றிய ஐப்பசித் திருவோணத் தினத்தன்றும் சிறப்பாக உத்ஸவமும் நடத்தி வைத்த ருளினார். இன்றும் அப்படியே நடந்து வருகிறது.

*திருமலை திருப்பதி தேவஸ்தான கீழ்திசை கல்லூரியில் நியாய வேதாந்த விபாகத்தின் தலைவராய் முப்பது வருடத்திற்கும் மேலாய் பணிபுரிந்தவரான ஸ்ரீ உ.வே. திருமலை அநந்தாண் பிள்ளை கிருஷ்ணமாசாரிய ஸ்வாமியின் நூற்றாண்டு நிறைவு (1921-2021) நினைவாக வெளியிடும் கட்டுரை.*

## சாஸ்த்திர நீதிகள்-91


அஹிம்ஸயைவ பூதானம்
கார்ய ச்ரியோ அநு சாஸனம் |
வாக் சைவ மதுரா ஸ்லக்ஷணா
ப்ரயோஜ்யா தர்ம மிச்சதா ||

உயிரினங்களிடம் அன்புடன் பழகி வர வேண்டும். நன்மையை எதிர்பார்ப்பவன் இனிமையுடன் பேசி பழக வேண்டும்.

**தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.**



# வந்தருள் புரியும் மஹா கணபதி



திருமதி கே. சுப்புலெட்சுமி, பரமகுடி,
9092013978


விநாயகர் வழிபாடு ஒன்றே தெய்வ வழிபாடுகளில் முதன்மை பெறுகிறது. விநாயகர் ஆற்றங் கரை, குளக்கரைகளில் ஏகாந்த மாக இருக்கிறார். மரங்களின் அரசனாம் அரச மரத்தடியில் அமர்ந்த பிள்ளையார் அரு ளாட்சி நல்கும் நிலையை உண ரலாம். எளிமையான அருகம் புல் சாற்றி பக்தியுடன் வணங்கி னாலே அருள் புரியும் நிலையைக் காணலாம்.

நம்பியாண்டார் நம்பிக்கு காட்சி தந்தவர். தில்லையில் நம்பியுடன், ராஜ ராஜ சோழன் சென்று மூவர் பாடிய தேவார ஏடுகள் கண்டறிந்த பின் அவற்றைத் தொகுத்தளிக்க, நம்பி யாண்டார் நம்பி ஏற்று செயல்படச் செய் தவர் பொள்ளாப் பிள்ளையார் ஆவார். இரட்டைப் பிள்ளையார் மகாபாரதம் எழுதும் முன் தன்னை போல் உருவை ஏற்க உருவை ஏற்படுத்திவிட்டு, பின்னரே பாரதம் எழுதினார். இது எதற்காக? பக்தர்கட்கு அருள் புரிய தனது மாற்றுரு ஏற்படுத்தி பக்தர்கட்கு அருளும் அற்புத நிலை அமைந்தது. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் இரட்டைப் பிள்ளையாரை முதலில் தரிசித்து அன்னையை அப்பனை தரிசிப்பது வழக்கம். இதே போன்ற இரட்டைப் பிள்ளையார் தேனி தொழிற்பேட்டை வாசலில் அமைந்துள்ளார்.

**நீலகண்ட விநாயகர் :**

**விநாயகர் சதுர்த்தி அன்று மஞ்சள், களிமண், மாவு மற்றும் இயற்கை பொருட்களால் என்னை உருவாக்கி பூஜை செய்து இயற்கையை காப்பது மனித குலத்தின் தலையாய கடமை.**

சுசீந்திரத்தில் தாணு, மால், அயன் ஒன்றிணைந்திருப்பதை வணங்கிய பின்பு சிவபார்வதி இணைந்து விநாயகராகக் காட்சி தரு வதை தரிசிக்க வேண்டும். புற்று மண் விநாயகரை வணங்கிட இலாபம் உண்டா கும். உப்பு விநாயகரை வழி பட எதிரிகள் அழிவர். எதிரி தொல்லை நீங்கும். கல்லா லான விநாயகர் வழிபாட்டினால் சகல பாக்கியமும் ஏற்படும். மாவினால் செய்த விநாயகரை வழிபட செல்வம் சிறந்தோங்கும். மஞ்சள் பிள்ளை யாரை வணங்கிட நற்காரியங்கள் ஏற்படும். வெல்லப் பிள்ளையாரை வழிபட்டால் நல்வாழ்வு நாளும் சிறப்புறும். பசுஞ்சாண கணபதியை வழிபட பிணிகள் நீங்கும்.



தானியவளம் மிகவாகும். நவக்கிரக விநாயகர் – ஒன்பது கிரகங்களையும் தன்னுள்ளே அடக்கியுள் ளார்.

நெற்றியில் சூரியன், நாபிக் கமலத்தில் சந்திரன், வலது துடையில் செவ்வாய், வலது கீழ் கையில் புதன், தலையில் வியாழன், இடது கீழ் கையில் வெள்ளி, வலது மேல் கையில் சனி, இடது மேல் கையில் ராகு, இடது துடையில் கேது என நவகோள்களை அடக்கி யாளும் விநாயகரை வணங்கிட கோள் களின் வீச்சு குறைகள் நீங்க வழி வகுக்கும். நவக்கிரக தோஷங்கள் நீங்க விநாயக வழிபாடு ஒன்றே சிறந் ததாகும்.

வெளிநாடுகளில் விநாயகர் வழிபாடு நடை பெற்றதற்கான சான்றுகள் உள்ளன. பக்தியுடன் ஒருமுகப்பட்டு விநாயகரை வணங்கிட எளிதில் உதவும் கருணையோடு அருள் வழங்கும் அவர் திருவடிகளைப் போற்றி வணங்கு வோம்.



# விநாயகரின் ஆறுபடை வீடுகள்

1) **திருஅண்ணாமலையில் அல்லல்போம் விநாயகர் – துன்பங்கள் நீங்கும்.**

2) **விருத்தாசலம்–ஆழத்துப் பிள்ளையார்–பூமிக்கடியில் உள்ள இவரை படிகளின் மூலம் இறங்கி தரிசிக்க வேண்டும். இங்கு கொடி மரம் உள்ளதைக் காணலாம்.**





3) **திருக்கடவூர் – கள்ள வாரணப் பிள்ளையார். இவரை அபிராமி அந்தாதியில் சுப்பிரமணியம் என்ற அபிராமிபட்டர் போற்றிப் பாடியுள்ளார்.**

4) **மதுரையில் மீனாட்சி அம்மன் கோயிலில் சித்தி விநாயகர். மாணிக்கவாசகர் இவரை வணங்கிய பின்பே பரிகள் வாங்கச் சென்றார்.**

5) **பிள்ளையார்பட்டி – கற்பக விநாயகர். கையில் சிவலிங்கம் தாங்கி பூஜை செய்வது போன்ற நிலையில் காணலாம்.**

6) **திருநாரையூரில் பொள்ளாப் பிள்ளையார். உளிபடாத சுயம்பு ஆவார். திருமுறை காட்டிய பிள்ளையார் என்ற சிறப்பும் உண்டு.**












6

# திருமலையப்பனும் திருவரங்கநாதனும்

**பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,**
**புவனகிரி, 94434 39963**

ஆழ்வார்களில் திருப்பாணாழ்வார் 10 பாசுரங்களால் வேதத்தின் சாரத்தை பிழிந்துக் கொடுத்திருக்கிறார். *''என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''* என்று எம்பெருமானைக் கண்டபிறகு, இந்தக் கண்களுக்கு வேறு பொருள் லட்சியமே இல்லை என்று காட்டித் தந்திருக்கிறார்.

எது மிக உயர்வான ஒரு இன்பமோ, அந்த இன்பத்தை அடைந்த பிறகு, மற்ற இன்பங்கள் எல்லாம் அதைவிடக் கீழானதாகவே இருக்கும். "என் அமுதன்" என்று யாரைச் சொல்லுகின்றார் பாணர்?

காவிரிக் கரையில் நின்று கொண்டு, யாழ் இசைத்து அரங்கனைப் பாடியவர். நிறைவாக அந்த அரங்கனோடு உள் புகுந்தவர் திருப்பாணாழ்வார் என்கிற சரித்திரம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் இங்கே கேள்வி அவர் மலையப்ப சுவாமியைப் பாடி இருக்கிறாரா? பாடியிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

வைணவ சமய மரபிலே நேரடியாக ஒரு பதிகமோ, பாசுரமோ பாடித்தான் மங்களாசாசனம் செய்ய வேண்டும் என்கின்ற அவசியமே இல்லை.

ஏதாவது ஒரு பாசுரத்தில், ஒரு திவ்ய தேசத்தைப் பற்றிய ஒரே ஒரு குறிப்பு வந்து விட்டாலும், அந்த ஆழ்வார், அந்த திவ்ய தேசத்தை மங்களாசாசனம் செய்ததாகத்தான் பொருள். அந்த அடிப்படையில் திருப்பாணாழ்வார் திருவரங்கன் மீது பத்து பாசுரங் கள் பாடி இருக்கிறார். அவர் திருவேங்கட வனை இரண்டு பாசுரங்களில் மங்களாசாசனம் செய்திருக் கிறார் என்பதால், அவர் திருவேங்கடவ னையும் பாடியிருக்கிறார் என்பது ஆசாரியர்கள் நிர்ணயம். இந்த அடிப்படையில் திருமலை அப்பனை அவர் எப்படி மங்களாசாசனம் செய்கிறார் என்கிற ஒரு பாசுரத்தை அனுபவிப்போம்.

*''அமலன் ஆதி பிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த*
*விமலன் விண்ணவர்கோன் விரையார் பொழில் வேங்கடவன்*
*நிமலன் நின்மலன் நீதி வானவன் நீள்மதிள் அரங்கத்தம்மான் திருக்*
*கமல பாதம் வந்து என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே''*



முதல் பாத்திரத்திலேயே அவருக்கு திருமலையப்பன் நினைவு வந்து விடுகிறது. இந்தப் பாசுரத்தை இப்படியும் மலையப்பனை மையப் படுத்தி அன்வயம் கொள்ளலாம்.

*''விரையார் பொழில் வேங்கடவன் அமலன், ஆதிபிரான், அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன், விண்ணவர் கோன், நிமலன், நின்மலன், நீதி வானவன், நீள்மதிள் அரங்கத்தம்மான்''* என்றும் பொருள் கொள்ளலாம்.

பரிமளம் மிக்க குளிர்ந்த சோலைகளை உடைய திருவேங்கட மலையில் வந்து தங்கி, இன்றளவும் நமக்கு சேவை சாதித்து வரும் அந்த எம்பெருமான் தான் திருவரங்கன்.

1. அவன்தான் ஆதிபிரான். 2. அவன் தான் அடியார்க்கு என்னை ஆட்படுத்தியவன். 3. அவன் தான் தேவாதி தேவன். 4. அவன் தான் ஒரு கைமாறும் கருதாத சுத்தியை உடைய நிமலன். 5.அவன் தான் எந்தவித உதவியையும் தன்னுடைய பேறாகக் கருதி செய்யும் நின்மலன். 6. அவன் தான் தலைவன் தொண்டன் என்கின்ற முறை வழுவாதபடி சேஷ சேஷி பாவத்தோடு நியாயமே சொல்லும் பரமபதத் தலைவன். 7. அவன் தான் இப்பொழுது அர்ச்சையில் என் கண்ணெதிரே காட்சி தரும் நீண்ட மதில்களை உடைய திருவரங்கத்தில் கண் வளர்ந்து அருளுகின்ற அழகிய மணவாளன்.

திருப்பாணாழ்வார் திருவரங்கத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்தாலும் கூட, திருமலை அப்பன் தான் இங்கு வந்து படுத்துக் கிடக்கின்றான். இதற்கு முன்னாலே திருமலை வந்து நின்றவன் என்று மங்களாசாசனம் செய்கின்ற அழகைக் கவனிக்க வேண்டும்.

முதல் வார்த்தை அமலன் என்கின்ற வார்த்தை. பகவானுடைய "ஹேயப்ரத்யநீகதையை'' அனுபவிக்கின்ற வார்த்தையாகும். இது பகவானின் சீல குணத்தைக் காட்டுகிறது. இதைத்தான் நம்மாழ்வாரும் *''உயர்வற உயர் நலம்''* என்று அனுபவித்தார். இந்த குணமாவது உபநிடதமாகிய ஆனந்த வல்லியிலும் சொல்லப் படாத குணமாகும்.

இதை இன்னும் தெளிவாக, *''என் கண் பாசம் வைத்த பரஞ்சுடர் ஜோதி''* என்று திருவேங்கடவனை நம்மாழ்வார் சொன்ன அதே வார்த்தையை அமலன் என்கிற சப்தத்தாலே திருப்பாணாழ்வார் சொல்வதால், இப்பாசுரம் திருவேங்கடவனைக் குறிக்கிறது என்று எடுத்துக் கொள்ளலாம்.

இங்கே *''விரையார் பொழில் வேங்கடவன்''* என்பது மிக முக்கியமான பதம். பரிமளம் நிறைந்த திருச்சோலைகளை உடைய திருமலையை தன்னுடைய வாசஸ்தலமாகக் கொண்டவன்.

பரமபதத்தில் இருந்து பூலோகத்திற்கு வந்து எம்பெருமான் இடையில் சற்று இளைப்பாற, கால் தாழ்ந்த பூமி என்று திருமலையைச் சொல்வார்கள்.

எனவே, திருவரங்கத்திற்கு முன்னாலேயே வந்து நின்ற தலம் என்கின்ற சிறப்பு திருமலைக்கு உண்டு. அதனால் தான் இத்தலத்தை *''விண்ணுக்கும் மண்ணுக்கும் வைப்பு''* என்று ஆழ்வார்கள் பாடுகின்றார்கள்.

மண்ணவர்கள் ஆகிய சம்சாரிகள் எம்பெருமானைக் காண திருமலையில் ஏறுகின்றனர். விண்ணோர்கள் அதே எம்பெருமானைக் காண திருமலைக்கு வந்து இறங்குகின்றார்கள்.

இருவரும் சந்திக்கின்ற ஒரு இடம் என்பது திருமலைக்கு பெருமை.

சந்தி செய்ய நின்றான் என்பது சந்தியா வந்தன வழிபாட்டைக் குறித்தாலும் சந்திப்பு நிகழ்கின்ற இடம் என்றும் எடுத்துக் கொள்ளலாம் (சந்தி–சந்தித்தல்) இந்த இடத்தில்தான் மண்ணவர்கள்

விண்ணவர்கள் இருவரும் காக்கின்ற பரம் பொருளாகிய எம்பெருமானை ஒரே இடத்தில் சந்திக்கும் வாய்ப்பு நிகழ்கின்ற இடம் திருமலை.

சரி. திருவரங்கனைப் பாட வேண்டியவர், நேராக திருவரங்கனைப் பாட வேண்டியதுதானே. இடையிலே திருமலையப்பனைப் பாட வேண்டிய அவசியம் என்ன என்கின்ற கேள்வி எழுகிறதல்லவா?

இக்கேள்வி பிள்ளை திருநறையூர் அரையர் என்கின்ற மகானிடம் கேட்டார்கள். பெரிய பெருமாளை அனுபவிக்க வந்தவர் இடையில் திருமலையப்பனிடம் செல்வது என்ன? அதற்கு பிள்ளை திருநறையூர் அரையர் பதில் சொன்னார்.

திருவரங்கன் பெரிய ஆறு. அந்த ஆற்றிலே ஏராளமான தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது. ஆங்காங்கே ஆளை இழுக்கும் மடு இருக்கிறது. எங்கே பள்ளம் எத்தனை பள்ளம் என்பது தெரியவில்லை. புதிதாக ஆற்றில் இறங்குபவன் என்ன செய்வான்?

ஒரு காலை மேட்டிலே வைத்துக் கொண்டு ஒரு காலை பள்ளத்தில் வைத்து ஆழம் பார்ப்பான். ஒரு காலை மேட்டிலே வைத்தால் பிழைக்கலாம் என்று திருமலை மேட்டிலே கால் தாழ்ந்தார். ஆனால் அது இன்னொரு பள்ளம் (மடு) என்று அறியவில்லை ஆழ்வார். இதற்கு இன்னும் ஒரு விதமாகவும் நம்முடைய ஆசாரியர்கள் பொருளுரைத்து இருக்கின்றனர்.

ஒருவரைக் கவிபாடும் பொழுது, அவருடைய பெருமைகளை எல்லாம் சொல்லித்தான் கவிபாட வேண்டும். இந்த இடத்தில் பிறந்தான். இந்த இடத்தில் அமர்ந்தான். இந்த இடத்திலே தங்கினான். அங்கிருந்து இங்கு வந்தான் என்று வந்த வரலாற்றையும் சொல்லிப் பாடுவது கவி மரபு.

கிருஷ்ணாவதாரத்தில் பரமபதத்தில் இருந்து வந்த பகவான், மதுரையிலேயே தங்கி திருவாய்பாடிக்கு வந்தது போல, திருவரங்கனும் ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து வந்து, திருமலையில் தங்கி பிறகு திருவரங்கத்திற்கு வந்தான்.

***“வேங்கடவன் என்கின்ற சொல் அர்ச்சாவதாரத்துக்கு பொற் கால் பொலிய விட்ட விடம்”*** என்று ஆசாரியர்கள் உரை எழுதுகிறார்கள்.

எனவே, இப்பாசுரமானது திருமலையப்பனைச் சொல்லியே திருவரங்கனை மங்களாசாசனம் செய்கின்ற பாசுரம். திருமலை அப்பனையும் திருவரங்க நாதனையும் ஒரு சேரக் காட்சிப்படுத்துகின்ற பாசுரம்.

திருமலை அப்பன் தான் திருவரங்கநாதன் என்று வந்த வரலாற்றைக் காட்டுகின்ற பாசுரம்.

பாசுரம் படிப்போம்...




# மங்கள சுலோகங்கள்

*காயத்ரீம் துளசீம் கங்காம் காமதேனு மருந்ததீம் ।*
*பஞ்சமாத்ரூஹ் ஸ்மரேந் நித்யம் மஹாபாதகநாசனம் ॥*




**மாபெரும் பாவங்கள் ஒழிவதற்காக காயத்ரி, துளசி, கங்கை, காமதேனு, அருந்ததி ஆகிய ஐந்து அன்னையரையும் தினமும் நினைத்துக் கொள்ளவேண்டும்.**

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

*"ஸ்வாமி புஷ்கரணி ஸ்நான ஈ*
*மஹாத்மன தர்சன...."*

இந்த பூமியில் பிறந்த மனிதன் பக்தியுடன் இத்திருமலைக்கு வந்து இங்குள்ள ஸ்வாமி புஷ்கரணியில் நீராடி, இங்கு எழுந்தருளியுள்ள மகாத்மாவை தரிசித்தால் போதும். மூவுலகையும் காக்கும் திருவேங்கடவனை தரிசித்தால் அனைத்து பாவங்களும் விலகி மோட்சம் அடையலாம்.

*"சுரரு கந்தர்வரு உரகயக்ஷ பித்த*
*கருட கிம்புருஷ கின்னரருகுஹ்யகரு"*

விஜயதாசர் இந்த மலைக்கு வந்த போது தாம் கண்டவற்றை இவ்வாறு கூறினார்.

விஜயதாசர் திருமலையைப் புகழ்ந்து பலவாறு பாடியுள்ளார். அவைப் பற்றிக் காண்போம். திருமலையில் உள்ள கற்சிற்பங்கள் அனைத்தும் சாளகிராமங்கள் என்றும், இப்பூமியை வைகுண்டம் என்றும், வெண்ணிற தீபம் என்றும் (ஸ்வேத தீபம்–தீபகற்பம்), அனந்தாசனம் இதுவே என்றும் கூறுகிறார். மேலும் விஜய விட்டலனான திருவேங்கடவனை பிரம்மா, சிவன் முதலியோர் மிகுந்த பக்தியுடன் வழிபடுகின்றனர் என்றும் கூறுகிறார்.

*"வரகிரி யாத்ரெ மனமுட்டி மாடலு*
*வரவீவ பரநாம விஜய விட்டல திம்மா!!"*

இத்திருமலை யாத்திரையை முழு மனதுடன் பக்தியுடன் யார் செய்கிறாரோ அவர்களுக்கு வேண்டும் வரங்களை தந்து அருள்புரிபவர் விஜயவிட்டலனான திருவேங்கடவன்.

மூவுலகத்தில் உள்ள அனைத்து திருத்தலங்களிலும் இத்தலமே அதாவது இந்த திருமலையே மிகவும் புகழ் பெற்றது. பக்தர்கள் இம்மலையில் அடியெடுத்து வைத்தாலே போதும் அனைத்து நற்பலன்களையும் பெற்று மேன்மை அடைவர். தெய்வ மார்கத்தில் பயணம் செய்வர்.

இம்மலையில் நீராடுதல், தானதர்மங்களை செய்தல் போன்ற அனைத்து செயல்களும் புண்ணியத்தைத் தரும். இம்மலை இமய மலைக்கு சமமானவை. துஷ்டர்களின் தொந்தரவுகள் இருக்காது. தேவதைகளின் ஆசிர்வாதம் கிட்டும்.

*"க்ருதயுகதலி இதே வைகுண்ட வெனிசோது!!..."*

இப்பாடலில் க்ருதயுகத்தில் வைகுண்டமாகவும், த்ரேதா யுகத்தில் அனந்தாசனமாகவும், த்வாபர யுகத்தில் ஸ்வேத த்வீபமாகவும் கருதப்படும் இவ்விடம், இந்த யுகத்தில் "வரகிரியாக" பெயர் பெற்றது (வரத்தை அருளும் மலை). இந்த பரதக் கண்டத்தில் அனைவரும் ஒன்று சேர்ந்து யக்னம், ஜபம், தீர்த்த யாத்திரை, தானங்கள், பல விதமான விரதங்கள் ஆகியவற்றை செய்து ஸ்ரீகிருஷ்ணருக்கு அர்ப்பணித்து வருகின்றனர். சதுர் முகத்தையுடைய பிரம்மா இம்மலையின் சிறப்பை அறிந்து கொண்டார். சாதாரண மக்களால் அறிய



# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்



முடியுமா? பக்தியுடன் துதித்தாலே போதும் இங்கு எழுந்தருளிய திருவேங்கடவன் அருள்புரிவான். *"தரெ கிது வைகுண்டபுரவிது நிஜ வேந்து..."* இப்பூமியில் இது வைகுண்டம் என்ற உண்மையை உணர்ந்து கின்னரர், சித்தர்கள், கருடர், தேவதைகள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், கிம்புருடர், தும்புரர் முதலியோர் இந்த திருவேங்கடவனை பக்தியுடன் வழிபட்டனர்.

மற்றொரு கீர்த்தனையில், இம்மலையில் தேவதைகள் அனைவரும் செடி, கொடி, மரம், பறவைகள், மிருகங்கள் போன்ற பல விதமான உருவங்களில் தோன்றி பக்தர்களுக்கு அழகிய வடிவில் காட்சி தருகின்றனர். பகவான் மீது பக்தியில்லாதவர்களின் கண்ணுக்குப் புலப்பட மாட்டான்.

இத்திருமலையை பூஜிப்பவருக்கு வேங்கடவன் எப்பொழுதும் அருள் புரிவான். இத்திருமலை யாத்திரை அனைவருக்கும் கிட்டாது. சிலருக்கு மட்டுமே கிட்டும். இம்மலையின் மகிமையை வார்த்தைகளால் சொல்ல இயலாது. "எல்லா பிறவிகளிலும் செய்த புண்ணியத்தால் தான் அனந்தகிரி யாத்திரை கிட்டும்." பக்தர்கள் பக்தியுடன் ஸ்ரீநிவாசனுக்கு பல சேவைகள் செய்கின்றனர். அதில் மிகவும் உயர்ந்தது "படி ஏறும் சேவை". திருமலையை அடைந்த பின் பக்தர்கள் திருவேங்கடவனை எவ்விதமாக தரிசித்து கொள்ள வேண்டும் என்று இக்கீர்த்தனையில் கூறியுள்ளார்.

*"கிரிய தப்பலல்லி மெரெவ கபில தீர்த்த!..."*

இங்குள்ள மரம், செடி, கொடிகளின் இலைகள் ஆகியவை நீருடன் கலந்து, கீழ் திருப்பதியில் உள்ள கபில தீர்த்தத்தில் அருவியாக வீழ்கின்றன. முன்னதாக அத்தீர்த்தத்தில் பக்தர்கள் பக்தி சிரத்தையுடன் நீராடி ஆங்கே பிராம்மணர்களுக்கு தம் சக்திக்கு ஏற்றவாறு தானங்கள் செய்து அதன் பின்னர் திருமலைக்கு வர வேண்டும். எவ்வாறு என்றால் பாதயாத்திரையாக நடந்து நூறு படிகள் வீதம் ஏறி அங்கே அமர்ந்து ஸ்ரீநிவாசனின் நாமங்கள் மற்றும் ஹரிகதைகளைக் கேட்டவாறு பக்தியுடன் வர வேண்டும்.

பின்னர் வழியில் உள்ள நரசிம்ம ஸ்வாமியை தரிசித்து, ஆலய கோபுர சிகரத்தைக் கண்ணாரக் கண்டு, பிரதக்ஷணம் செய்து வராக ஸ்வாமியை தரிசித்து அதன் பின் புஷ்கரணியில் நீராடி திருவேங்கடவன் ஆலய மஹத்வாரத்தை அடைந்து உள் சென்று ஆங்குள்ள கருட கம்பத்தை வணங்கி, ஸ்வாமியை ஸ்மரித்தவாறு மனதில் நினைத்துக் கொண்டு திருவேங்கடவனை வழிபட வேண்டும். இவ்வாறு செய்தால் முக்தி பெறலாம். புஷ்கரணியில் நீராடிய பிறகு தான தர்மங்கள் செய்தால் மகா புண்ணியம் கிட்டும்.

திருமலையைக் காண்பதும் திருமலைவாசனை தரிசிப்பதும் சகல பாவங்கள் நீங்கி நற்பலனைப் பெறும் மார்க்கம். இதனை மனதிற்கொண்டு திருமலையை தரிசித்து இன்புற வேண்டும்.

*"சிவவ ப்ரம்ஹ ஹத்ய சந்த்ரவ*
*குருதல்ப*
*.... பவகிரிகெ வஜ்ராவிஜய*
*விட்டல*
*பாரதவகெ தய மாடாநெந்திகு..."*

சிவனின் பிரம்மஹத்ய தோஷம், சந்திரனின் குருதல்பம், சுக்கிரனின் சுரா பாணம், பலி சக்கரவர்த்தியின் ஸ்வர்ண அபஹாரம், இந்திரனின் பரஸ்திரிகமனம், பலபத்ரனின் பாவம், யமன் ஆகியோர் பாவங்கள் எல்லாம் இந்த மலையை தரிசித்ததால் தான் அழிந்து மோக்ஷம் அடைந்தனர்.

தொடரும்...

தெலுங்கு மூலம்:
திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம்:
திரு. வி. வேங்கடரமணா


# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 61

**இடமிருந்து வலம் :**

1. வேதாந்த தேசிகர் நட்சத்திரம்....(5)
9. நஞ்சீயர் திருநட்சத்திரம்....(5)
21. நாதமுனிகள் திருநட்சத்திரம்.....(4)
27. மாறனேர் நம்பி திருநட்சத்திரம்.....(5)

**வலமிருந்து இடம் :**

2. எம்பார் திருநட்சத்திரம்....(6)
4. கோவில் கந்தாடை நாயகனின் திருநட்சத்திரம்.....(7)
5. வடுக நம்பி பிறந்த மாதம் ....(4)
6. பிரதிவாதிபயங்கரம் அண்ணா் திருநட்சத்திரம்.....(3)
11. குரு திருவரங்கப் பெருமாள் அரையர் திருநட்சத்திரம்.....(3)
14. மதுரகவி ஆழ்வார் நட்சத்திரம்....(4)
17. பின்பழகராம் பெருமாள் ஜீயரின் திருநட்சத்திரம்....(4)
19. மணக்கால் நம்பியின் திருநட்சத்திரம்....(3)
22. திருப்பாணர் திருநட்சத்திரம்....(3)
25. பொய்கையாழ்வார் திருநட்சத்திரம்.....(5)



தொகுப்பு :
**திரு. டி.ஆர். மனோகர், தஞ்சாவூர், 99426 44807**

புதிருக்கு விடை அறிய 22ம் பக்கம் பார்க்கவும்...

**மேலிருந்து கீழ் :**

1. இராமாநுஜர் திருநட்சத்திரம்....(5)
3. முடும்பை நம்பி பிறந்த மாதம்...(1)
6. சொட்டை நம்பி அவதரித்த திருநட்சத்திரம்...(5)
7. வடக்குத் திருவீதிப்பிள்ளை பிறந்த மாதம்.....(2)
8. திருமழிசையாழ்வார் திருநட்சத்திரம் ....(3)
9. ஆளவந்தார் அவதரித்த திருநட்சத்திரம்.....(6)
10. திருக்கச்சி நம்பிகள் திருநட்சத்திரம்....(7)
12. மணவாள மாமுனிகள் திருநட்சத்திரம்....(3)
15. திருமலையாண்டான் பிறந்த மாதம்....(2)
18. சேனை முதலியாரின் திருநட்சத்திரம்....(4)
20. பெரியாழ்வார் உதித்த திருநட்சத்திரம்....(3)
21. திருவரங்கத்தமுதனார் திருநட்சத்திரம்....(4)
21. பூதத்தாழ்வார் பிறந்த திருநட்சத்திரம்....(5)
23. எறும்பியப்பா திருநட்சத்திரம்....(3)
24. கூரத்தாழ்வார் பிறந்த மாதம்.....(1)
26. குலசேகர ஆழ்வார் திருநட்சத்திரம் .....(6)
28. நம்மாழ்வார் அவதரித்த திருநட்சத்திரம்....(4)

**கீழிருந்து மேல் :**

6. சூடிக்கொடுத்த சுடர் கொடி திருநட்சத்திரம்....(3)
13. பேயாழ்வார் திருநட்சத்திரம்....(4)
16. உய்யக்கொண்டார் பிறந்த திருநட்சத்திரம்....(5)


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**தலைக்கவசம்! உயிர் கவசம்!!**

திருப்பதி – திருமலை மலைவழிச்சாலையில் இருசக்கர வாகங்களில் பயணம் செய்யும் பக்தர்கள் மலையை ஏறும் போதும், இறங்கும் போதும் தலைக்கவசம் (ஹெல்மெட்) அணிதல் அவசியமாகும்.

வாகனம் மலைவழிச் சாலையில் ஏறும் பொழுது 28 நிமிடமும் மலைவழிச் சாலையில் இறங்கும் பொழுது 40 நிமிடத்திற்கு முன்னதாக சென்றால் மீண்டும் மலைவழிச் சாலையில் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

– கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புத் துறை




# ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்


### கெடு தவறாத உண்மை

இராமன் சித்ரகூடத்தில் இருந்தபோது பரதன் வந்து அரசை சமர்ப்பித்து, நாட்டுக்குத் திரும்ப வர வேண்டினான். கைகேயிக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற, இராமன் நாடு திரும்ப மறுத்து பரதனைத் திரும்ப அனுப்பினான். அப்போது பரதன் ஸ்ரீராமனிடம் "பதினான்கு ஆண்டுகள் முடித்தவுடன் அடுத்த நாள் உன் முகத்தில் விழிக்காவிடில் நான் நெருப்பில் குதித்து உயிரை முடித்துக் கொள்வேன்" என்று சூளுரைத்தான். இராமனும் பதிலுக்கு "பதினைந்தாம் ஆண்டின் முதல் நாள் உன் முன் இருப்பேன்" என்றான். இதேபோல் த்ரிவேணி சங்கமம் அருகே பரத்வாஜ முனிவரிடம் "திரும்ப அயோத்தி வரும் போது உம்மை வணங்குவேன்" என்று முன்னமே கூறியிருந்தான். இலங்கையில் போர் முடிந்து, நிற்கவும் நேரமில்லாமல் புஷ்பக விமானத்தில் பறந்து வந்தபோது, கொடுத்த வாக்குக்காக பரத்வாஜ ஆசிரமத்தில் இறங்கினார். சோதனையாக, பரத்வாஜர் இராமனை ஒரு நாள் இரவு தங்கிப் போகச் சொன்னார். முனிவரின் ஆணையையும் மீற முடியாமல், பரதனிடம் கொடுத்த வாக்கையும் மீற முடியாமல், இராமன் ஆஞ்ஜநேயரை விரைவில் அனுப்பி பரதனை சமாதானப்படுத்தச் சொல்லிவிட்டு விடியலில் விமானத்தோடு நந்திக் கிராமத்தில் இறங்கினார். தன் தம்பிதானே என்று அலட்சியமாக இருக்காமல் அவனிடமும் தான் சொன்ன சொல்லைக் காத்தான் இராமன்.

நம் சொல்லை நாம் மதித்தால்தான் நம்மை பிறர் மதிப்பர்.

### முன் பின் தெரியாதவனிடம் சொன்ன முழு வரலாறு

இராமன் நாசிக் பஞ்சவடியில் இருந்தபோது இராவணனின் சகோதரியான அரக்கி சூர்பணகை அங்கு வந்தாள். இராமன் மேல் ஆசை கொண்டு அழகிய உருவத்தோடு வந்து இராமனிடம் "தவ வேடத்தோடு காட்டில் திரியும் அழகனே! நீ யார்?" என்று வினவினாள். முன்னறிமுகம் இல்லாதவர்களிடம் நம்மைப் பற்றி சொல்லுவோமா? ஆனால் இராமன், தன் தந்தை தசரதன் அறுபதினாயிரம் ஆண்டுகள் குழந்தையில்லாமல் தவித்ததிலிருந்து தொடங்கி, அவன் புத்ர காமேஷ்டி யாகம் செய்தது, நான்கு மகன்கள் பிறந்தது, சீதையோடு திருமணம்,



5

"ராமோத்விர் நாபிபாஷதே" எனும் சுலோகத்தின்படி, எந்த நிலையிலும் உண்மையே உரைப்பவன்.

## ஸத்ய வாக்யன்

திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி,
சென்னை.

நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்து பின் காட்டுக்கு வந்தது, ரிஷிகளை சந்தித்தது ஆகிய கதைகளை எல்லாம் கூறி இறுதியில் அயோத்தி செல்ல இன்னும் ஒரு ஆண்டே மீதம் இருப்பது வரை கூறினான். எவளோ ஒரு அரக்கியிடம் அவள் யார் என்றே கேட்காமல் தன்னைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் சொன்ன இராமனின் நேர்மை, உண்மை உரைத்தல் ஆகியவற்றை வால்மீகி வியந்து போற்றுகிறார்.

இராமனின் வீரமும் தைர்யமும் முன்னறிமுகமில்லாதவளிடத்தும் உண்மை பேச வைத்தது. எனவே நாம் உற்றாரிடமும் உறவினரிடமும் உத்யோகத்திலும் உண்மையை உரைக்க வேண்டும்.



கருத்து

**இரண்டாவது அம்பு, இரண்டாவது மனைவி, இரண்டாவது சொல் ஆகிய ஏதுமில்லாத இராமனை ஒரு முறை பற்றினாலே போதும்: நாம் எந்நிலையிலும் மெய்யே பேசுவோம்.**

**உண்மையால் வைகுந்தத்தையே வென்றவன்!**

சீதையைத் தூக்கிச் சென்ற இராவணனோடு கழுகுகளின் அரசனான ஜடாயு போராடித் தோற்றார். உயிர் பிரியும் நிலையில் இருந்த ஜடாயுவை சந்தித்த இராமன் அவருக்கு ஈமச் சடங்குகளைச் செய்து முக்தியும் அளித்தான். இராமன் மனிதனாகப் பிறந்து, அந்நிலையை மீறாமல் வாழ்ந்தவன். பின் எப்படி, திருமாலால் மட்டுமே கொடுக்க முடிந்த வைகுந்தத்தை மனித நிலையினை ஏறிட்டுக் கொண்டிருந்த இராமன் ஜடாயுவுக்கு அளித்தான்? என்று ஒரு மன்னனுக்கு ஐயம் வர, அதற்கு ஒரு ஆசார்யர் "ஸத்யேந லோகாந் ஜயதி" – எனும் சுலோகத்தின்படி, "இராமன் உண்மையே பேசும் சிறப்பால் இவ்வுலகத்தையும் வைகுந்தத்தையும் வென்று தன் உடைமையாக்கி வைத்திருந்தான். ஒரு மனிதனாய், தன் சொத்தாக ஆக்கிக் கொண்ட வைகுந்தத்தை ஜடாயுவுக்கு அளித்தான். கடவுளாக அல்ல" என்று பதில் கூறினார்.

எந்நிலையிலும் உண்மையையே உரைத்தால் வைகுந்தத்தையும் தனதாக்கிக் கொள்ளலாம்... என்பது இதன் கருத்து.

*வளரும்...*











மொழிகற்போம்

# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## एकादशः पाठः பாடம்-11

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. बालकः | = | சிறுவன் | 2. इव | = | போல | 3. स्नानं | = | குளியல் |
| 4. ब्राह्मणः | = | பிராமணன் | 5. खलु | = | அல்லவா! | 6. स्नानानि | = | குளியல்கள் |
| 7. अनुजः | = | தம்பி | 8. अहो | = | அப்படியா? | 9. भोजनं | = | உணவு |

### வினாக்கள்

1. सर्वे ब्राह्मणाः कुत्रासन्?
2. ते स्नानं कुर्वन्ति।
3. अत्र अद्य किमस्ति?
4. किमपि नास्ति।
5. केचन बालकाः तत्र भोजनानि कुर्वन्ति।
6. वयं सर्वे अत्र स्नानं कुर्मः।
7. अत्र कति बालकाः सन्ति?
8. बालकाः सर्वे अत्रैव सन्ति।
9. यूयं स्नानं न कुरुथ किम्!
10. अहो! यूयं बालकवत् तत्र कुतः भोजनानि कुरुथ?

1. எல்லா பிராம்மணர்களும் அங்கு சாப்பிடுகிறார்களா?
2. நாங்கள் இங்கு சாப்பிடுகிறோம்.
3. நீங்கள் எங்கு குளிக்கிறீர்கள்?
4. எல்லாச் சிறுவர்களும் அங்கு இல்லை.
5. இங்கு ஒருவரும் சாப்பிடவில்லை.
6. அவன் சிறுவனைப் போல இருக்கிறான்.
7. இவர் குளிக்கிறார் அல்லவா!
8. செய்யவில்லை.
9. எதற்கு?
10. அவர்கள் சிறுவர்களைப் போல இருக்கிறார்கள்.

### விடைகள்

1. பிராம்மணர்கள் எங்கு இருக்கிறார்கள்?
2. அவர்கள் குளித்துக் கொண்டிருகிறார்கள்.
3. இப்போது (இந்த வேளை) இங்கு என்ன?
4. ஏதுமில்லை.
5. சில சிறுவர்கள் அங்கு சாப்பிடுகிறார்கள்.
6. நாங்கள் எல்லாரும் இங்கு குளித்துக் கொண்டிருக்கிறோம்.
7. எத்தனைச் சிறுவர்கள் இங்கு இருக்கிறார்கள்?
8. சிறுவர்கள் எல்லோரும் இங்கேயே இருக்கிறார்கள்.
9. நீங்கள் ஏன் குளிக்கவில்லை.
10. நீங்கள் சிறுவர்களைப் போல் எதற்குச் சாப்பிடுகிறீர்கள்? அப்படியே!

1. सर्वे ब्राह्मणाः तत्र भोजनं कुर्वन्ति?
2. वयं अत्र भोजनं कुर्मः।
3. यूयं कुत्र स्नानं कुरुथ?
4. सर्वे बालकाः तत्र न सन्ति?
5. अत्र एकः अपि भोजनं न करोति।
6. सः बालकः इवास्ति ?
7. एते स्नानं कुर्वन्ति खलु।
8. न कुर्वन्ति।
9. किमर्थम्?
10. ते बालकाः इव सन्ति।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி, தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா
தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்


# புன்னகை வாழ்வை தரும் புரட்டாசி சனிக்கிழமை

தமிழ் மொழிக்கென தனியாக மாதங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அப்படி அமைந்த பன்னிரண்டு மாதங்களில் புரட்டாசிக்கு தனிச்சிறப்பு உண்டு. இது வழிபாட்டுக்குரிய மாதமாகவும், மகாவிஷ்ணுவுக்கு உகந்த மாதமாகவும் கருதப்படுகிறது. புரட்டாசி மாதத்தில் வரும் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் அவருக்கு சிறப்பு வழிபாடு செய்யப்படுகின்றன. அதற்கான காரணங்களைப் பார்ப்போம்.

புரட்டாசி சனிக்கிழமைகளில் பெருமாளை வழிபட்டால் எல்லாவிதமான கஷ்டங்களும் நீங்கி வளமான வாழ்வு கிடைக்கும் என்பது ஆன்மீகத்தை போதிக்கும் சான்றோர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருக்கிறது. நவக்கிரகங்களில், கல்வி, கேள்விக்கு அதிபதியான புதனை வழிபடவும் இந்த புரட்டாசி மாதம் உகந்ததாக உள்ளது. புதன் கிரகத்தின் அதிதேவதையாக மகா விஷ்ணுவே அருள்கிறார். எனவேதான் விஷ்ணுவின் அருள் பெற உகந்த மாதமாக புரட்டாசி திகழ்கிறது.

பெருமாளின் அம்சமாகவே கருதப்படும் புதனுடைய வீடு கன்னி ராசியாகும். இந்த கன்னி ராசியில் சூரியன் அமர்வது புரட்டாசி மாதத்தில் தான். ஆகவே இந்த மாதத்தில் பெருமாளுக்கான சிறப்பு வழிபாடுகள், பிரம்மோத்ஸவங்கள் நடத்தப்படுகின்றன. புதனுக்கு நட்பு கிரகமாகத் திகழ்பவர் சனீஸ்வரன். அதனால்தான் சனி பகவானுக்கு உகந்த சனிக்கிழமைகள், புரட்டாசி மாதத்தில் விசேஷமானதாகக் கருதப்படுகிறது.

புரட்டாசி மாதத்தை “எமனின் கோரைப் பற்களுள் ஒன்று'' என்று அக்னி புராணம் குறிப்பிடுகிறது. எமபயம் நீங்கவும், துன்பங்கள் விலகவும், புரட்டாசி மாதத்தில் காத்தல் கடவுளான விஷ்ணுவை வணங்குவது சிறப்பு. ஒவ்வொரு மாதமும் சனிக்கிழமைகளில் விரதம் கடைபிடிப்பது நல்லது. அப்படி விரதம் மேற்கொள்ள முடியாத புரட்டாசி சனிக்கிழமைகளில் அவரவர் குடும்ப வழக்கப்படி மாவிளக்கு ஏற்றி, பெருமாளுக்குப் பூஜை செய்து வழிபட்டு, அன்னதானம் செய்து வந்தால் பெருமாளின் அருள் கிடைக்கும்.



# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*தத்தோ ஜக$_3$ந்மங்க$_3$லபிங்க$_3$லாப்$_3$தே$_3$*
*சைத்ராக்$_3$ர்சுக்லச்ச$_2$த$_3$பஞ்சமீகே।*
*ஆர்த்$_3$ராபி$_4$த$_4$ர்க்ஷேண யுதே ச வாரே*
*ப்$_3$ருஹஸ்பதேஸ்ஸந்ம்ருக$_3$ராஜலக்$_3$நே॥* (6)
*வேதா$_3$ந்தஸித்$_3$த$_4$ாந்தஸமர்த்த$_2$நாய*
*ப$_3$ாஹ்யாந்தரப்$_4$ராந்தமதாபநுத்த்யை।*
*சேஷாம்சக: கேசவயஜ்வதே$_3$வ்யாம் தேஜோநிதி$_4$:*
*கச்சிதி$_3$ஹாவிராஸீத்॥* (7)

**அதன் பிறகு, உலகிற்கே மங்களமளிக்கும் பிங்கள வருஷத்தில், சிறப்புற்ற சித்திரை மாதத்தில் சுக்ல பக்ஷத்தில் பஞ்சமி திதியில் திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய வியாழக்கிழமையன்று நன்மைமிக்க சிம்ம லக்னத்தில் மறைமுடிகளின் முடிவை நிலைநாட்டுவதற்காகவும், வேதத்திற்குப் புறம்பான பாஹ்யமதங்களும், வேதத்திற்கு அவப்பொருள் சொல்லும் குத்ருஷ்டி மதங்களும் அழிவதற்காகவும் கேசவ ஸோமயாஜியின் மனைவியான பூதேவியிடம் ஆதி சேஷாம்சத்தை உடையவராய், ஒளி மிகுந்த ஒரு மஹாபுருஷர் அவதரித்தார்.**



**–“ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது**


சனிக்கிழமைகளில் பொதுவாக பெருமாளுக்கு விரதமிருப்பது வழக்கம் தான். இதில், புரட்டாசி மாத சனிக் கிழமைக்கென ஒரு விசேஷம் இருக் கிறது. புரட்டாசி சனிக்கிழமையில் தான் சனி பகவான் அவதரித்தார். அதன் கார ணமாக, அவரால் ஏற்படும் கெடுபலன் கள் குறைய, காக்கும் கடவுளான திருமாலை வணங்குவது வழக்கத்தில் வந்தது. இந்த விரதத்தின் மகிமையை விளக்க கதை ஒன்று கூறப்படுகிறது. அது என்னவென்று பார்ப்போம்.

பெருமாள் கோயில்களில் புகழ் பெற்றது திருப்பதி வேங்கடாசலபதி கோயில். திருப்பதி அருகே பெருமாளின் மிகச் சிறந்த பக்தர் ஒருவர் இருந்தார். பீமன் என்ற பெயருடைய அவர் மண் பாண்டங்களை செய்யும் தொழிலைச் செய்து வந்தார். இவர் பெருமாள் மீதான

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 61க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | வோ | ண | ம் | ச | பூ | ர் | ன | 2 பு | 3 தை | |
| ரு | தி | டா | ட் | ர | தி | த் | 4 உ | ரை | தி | த் | 5 சி |
| வா | | ம் | ச | 6 பூ | | | ம் | 7 ஆ | 8 ம | | கை |
| தி | 9 உ | த் | தி | ர | ம் | | ய | னி | க | 10 மி | தி |
| ரை | த் | | டை | ட் | 11 கே | | த | ம் | ம் | ரு | த் |
| | தி | 12 மூ | | பா | | | 13 ச | ட | ட | க | ர் |
| ம் | ரா | ல | ரை | தி | த் | 14 சி | 15 மா | ட் | ரா | சீ | 16 கா |
| ச | ட | ம் | ய | த | 17 ச | தி | சி | வி | 18 பூ | ரி | |
| பூ | ம் | ம் | க | 19 ம | னி | வ | 20 சு | 21 அ | னு | ஷ | ம் |
| ர் | க | | ணி | கி | 22 ரோ | 23 ரே | வா | ஸ் | 24 தை | ம் | க |
| ன | ம் | ண | வோ | ரு | 25 தி | | தி | த | | | சா |
| 26 பு | | | | 27 ஆ | யி | ல் | ய | ம் | | | 28 வி |










பக்தியால், தன்னுடைய ஆயுள் முழுவதும் சனிக்கிழமை விரதம் இருப்பதாக சங்கல்பம் எடுத்துக் கொண்டவர். ஆனால், இவரது ஏழ்மையின் காரணமாக எந்நேரமும் தொழிலில் மூழ்கிக் கிடப்பார். சனிக்கிழமைகளில் கோயிலுக்குப் போகக்கூட நேரம் இருக்காது, போனாலும் எப்படி வழிபடுவது என்று அவருக்குத் தெரியாது. "பெருமாளே, நீயே எல்லாம்" என்ற வார்த்தையை மட்டும் சொல்லிவிட்டு வந்து விடுவார்.

ஒருமுறை அவருக்கு மனதில் ஒரு எண்ணம் உதித்தும் "பெருமாளைப் பார்க்க கோயிலுக்கு போக நேரமில்லை. பெருமாளை இங்கேயே வரவழைத்தால் என்ன?" என்று யோசித்தார். படபடவென களிமண்ணால் ஒரு சிலையைச் செய்தார். பூ வாங்கும் அளவுக்கு அவரிடம் பணம் கிடையாது. எனவே, தான் வேலை செய்து முடிந்ததும் மீதமான மண்ணை சிறு சிறு பூக்களாகச் செய்து, ஸ்வாமிக்கு சமர்ப்பித்து வணங்கி வந்தார். அந்த பகுதியை ஆண்டு வந்த அரசர் தொண்டைமானும் பெருமாள் பக்தராவார். அவர் சனிக்கிழமைகளில் ஆலயத்திற்கு வந்து இறைவ னுக்கு தங்கப்பூக்களால் அர்ச்சித்து வந்தார். இப்படி அர்ச்சித்து வரும்போது ஒருமுறை பெருமாளின்மீது களிமண்ணால் செய்யப்பட்ட பூக்கள் கிடந்தன. "பட்டர்கள் தான் ஏதாவது தவறு செய்கிறார்களா?" என குழப்பத்தில் அரண்மனை திரும்பினார்.

அன்று கனவில் தோன்றிய பெருமாள், நடந்ததைச் சொன்னார். அந்த குயவரின் இல்லத்திற்கு நேரில் சென்ற அரசர், அவருக்கு வேண்டிய அளவு பொருளுதவி செய்தார். அப்பொருளைக் கண்டு மயங்காமல், பெருமாள் பணியே செய்து வந்த குயவர் இறுதி காலத்தில் வைகுண்டத்தை அடைந்தார். பெருமாளின் ஆணைப்படி அந்த பக்தரைக் கௌரவிக்கும் வகையில் இப்போதும் திருப்பதி ஏழுமலையானுக்கு மண் சட்டியில்தான் நைவேத்தியம் செய்யப்படுகிறது. புரட்டாசி மாதத்தில் வரும் திருவோணம் திதியே திருவேங்கடமுடையான் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட தினம் ஆகும். அந்த சிறப்பு தினம் முன்னிட்டே வருடம் தோறும் திருவேங்கடமுடையானுக்கு பிரம்மோத்ஸவம் நடத்தப்பட்டு வருகின்றது.

**திரு. ஜி. வேலாயுதம், சேலம்,**
**98437 50345**

# மானுடவியல் சார்ந்த கிரக சாஸ்திரம்



முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
சென்னை,
94443 92595.

பஞ்சாங்கம் என்பது சுபகாரியங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் மேற்கொள்ள நேரம் குறிக்கும் கணிதம் மட்டும் அல்ல, அதற்கும் மேல். வானுடவியல் என்ற கிரக சாஸ்திரம் மானுடவியலில் பல்வேறு துறைகளில் பெரிதும் பயன் பெறும் வாழ்க்கை வழிமுறை வழிகாட்டி ஆகும்.

இன்றைய காலச்சூழல் பல்வேறு இன்னல்கள் சூழ்ந்த சமுதாயமாக உள்ளது. இதில் பருவகால மாறுபாடு, பேரிடர் சேதங்கள், விபத்து, புயல், வெள்ளம், வறட்சி போன்ற நிகழ்வுகள் கிரக மாறுபாடு மற்றும் சுழற்சி, இணைவு போன்ற காரணங்களால் நிகழ்வதை பல்வேறு ஜோதிட நிபுணர்கள் கணித்து, அதை முன்னறிவிப்பாக பஞ்சாங்க ஏடுகளில் நாம் அறிய முடிகிறது. மேலும் நம் நாடு விளைநிலங்களை சார்ந்த வாழ்வியல் தத்துவம் கொண்டது.

எனவே, இதற்கான காரணிகளாக விளங்கும் மழைபொழிவு, காற்றின் திசை, வெயில் மற்றும் விதை விதைக்கும் உகந்த நாட்கள் போன்ற குறிப்புகள் நாம் தினசரி நாட்காட்டி வாயிலாக அறிந்து கொள்ள முடியும். உதாரணமாக மேல்நோக்கு நாள், கீழ் நோக்கு நாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தினசரி நாட்காட்டியில் காணலாம். இதன் பொருள் மேல் நோக்கு நாள் என்பது நிலத்தில் விதை விதைக்க மேல் நோக்கி விளையும் பூ, காய், கனி போன்ற தாவர வகைகளுக்கான உகந்த நாட்களாகவும், கீழ் நோக்கு நாட்களில் பூமிக்கடியில் விளையும் மஞ்சள், இஞ்சி மற்றும் கிழங்கு வகைகளை விதைக்கும் காலம் எனவும் அறிவியற் பூர்வ விளக்கங்களை நாம் அறிந்து கொள்ள முடியும். இதனை பாம்பு பஞ்சாங்கம் எனும் வாக்கிய பஞ்சாங்கத்தில் அட்டைப் பக்கத்தில் ஏர் உழுவது போன்று படமும், அதற்கு கீழ் விதை விதைக்க நாள் பார்க்கும் இராகு பணிச்சக்கர திண்டுவில் 27 புள்ளிகள் காணப்படும். இது 27 நட்சத்திரங்களை குறிக்கும். இத்தொடரில் பல்வேறு வகையான வாழ்க்கை பயன்பாடுகளை ஒவ்வொன்றாக காண்போம்.

### ஏர் உழ

அனுஷம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, ரோகிணி, அவிட்டம், மகம், அசுவனி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ரேவதி, மூலம் ஆகிய நட்சத்திரங்கள்.ஞாயிறு,



### குழந்தையைத் தொட்டிலில் விடுதல்



உடல் வளர்ச்சிக்கு ஓய்வு அவசியம். குழந்தைகளுக்கு இறைவனாலேயே ஏற்படுத்தப்பட்ட உடற்பயிற்சிதான் கை கால்களை அசைத்துக் கொள்வது. அவ்வுடற்பயிற்சிக்குப் பின்னர் ஓய்வு கொள்ள கண் வளர வேண்டும். குழந்தைப் பிறந்த 10,12,16 மற்றும் 22-ம் நாளில் தொட்டிலில் இடுவது வழக்கம்.இதற்கு ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, த்விதியை, திருதியை,பஞ்சமி, தசமி, ஏகாதசி, திரயோதசி சுபகோள்கள் பார்த்த லக்னமும், எட்டாமிடம் சுத்தியும் ஏற்றது.

செவ்வாய், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் பூமியில் ஏர் உழுவதற்கு ஆரம்பம் செய்ய உத்தமம்.

### திங்கள் மத்யமம்

பிரதமை, அமாவாஸ்யை, வைத்ருதி, வ்யா காதம், வ்யதீவாதம் ஆகிய யோகங்கள், பத்ர கரணம் ஆகியவற்றைத் தவிர்த்து மற்றைய சுபதினங்களில் ஏர் உழ ஆரம்பித்தல் நலம்.

### பயிர் செய்ய

விசாகம், ஹஸ்தம், ம்ருகசீர்ஷம், மகம், புனர் வசு, ரோஹிணி, அசுவனி, திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, மூலம், ரேவதி, சுவாதி, -அநுஷம், பூரம் ஆகிய 18 நட்சத் திரங்களில் செவ்வாய், வியாழன், ஞாயிறு ஆகிய கிழமைகளில் ரிஷபம், மீனம், மிதுனம்.

### அரைஞாண் அணிவிப்பது

வெள்ளி அல்லது பொன் அரை ஞாண் – புண் ணியாஹ வசனம் செய்யும் நாளன்று அல்லது ஐந்தா வது மாதத்தில் கட்டலாம். அவ்வரைஞாணுடன் கருகமணி, செப்புக்காசு (தொப்புள் கொடி விழுந் ததும் அதனை தாயத்து போன்றும் ஒரு சிலர் அணி விக்கின்றனர்) கட்டினால் தோஷங்கள் நீங்கும் எனப் பெரியவர்கள் கூறுவார்கள்.

சுபதிதிகள், சுப நட்சத்திரங்கள், அஷ்டம சுத்தியுள்ள சுப லக்னத்தில் அரைஞாண் அணிவித் தால் குழந்தை ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் இருக்கும். எருக்கஞ்செடியின் நாரி னால் அரைஞாண் கட்டினால் குழந்தை அடிக்கடி பாலைக் கக்குவது நிற்கும் என பாட்டி வைத்தியமும் கூறுகிறது.

## அன்னப்ராஸனம் - அமுதூட்டல்

தாயமுதால் வளரும் குழந்தைக்கு சிறந்த உணவுப் பழக்கத்தை ஏற்படுத்தச் சிறந்த நாளைத் தேர்ந்தெடுப்பது மரபு. இது 6,8,9 அல்லது 12 வது மாதத்தில் அஸ்வினி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், உத்திராடம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் த்விதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகளில் திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகளில் ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மகரம், கும்பமாகியஇலக்னங்களில் செய்வது உத்தமம். இதற்கும் எட்டாமிடம் சுத்தமாக இருக்க வேண்டும். லக்னம் பலம் வாய்ந்ததாக இருத்தல் அவசியம்.





தொடரும்...



# கண்ணன் கருத்துரை

*யத்யதாசரதி ச்ரேஷ்டஸ்தத்ததேவேதரோ ஜன: ।*
*ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததனுவர்ததே ।।* (3-21)

**உயர்ந்த குறிக்கோள் உள்ளவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்களோ அப்படியே உலகமும் நடக்கிறது. வாழ்க்கை முறையில் அவர்கள் தோற்றுவித்த நெறிகளையே பாமர மக்கள் பின்பற்றுகிறார்கள்**



**தொகுப்பு :**
**பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன், திருப்பதி.**

**கர்ண பூஷணம் - காது குத்துதல்**

ஆக்யுபங்சர் என்னும் முறை இன்று மிகவும் பிரபலமாகியுள்ளது. உடல் நலத்துக்கும், வளர்ச்சிக் கும், நோய் நிவாரணத்துக்கும் இம்முறை சிறந்த தாகக் கருதப்படுகிறது. எல்லாவற்றிலும் மிகவும் உயர்ந்த நிலையை எட்டிய நமது முன்னோர்கள் இதனைக் கருத்தில் கொண்டே காது குத்தும் நிகழ்ச் சியைக் குழந்தைப் பருவத்திலேயே செய்வித்தனர். 6,7 அல்லது 8–வது மாதத்தில் பகலில் செய்ய வேண் டும்.

இரண்டு திதிகள், இரண்டு நட்சத்திரங்கள் கொண்ட நாட்களைத் தவிர்க்க வேண்டும். மிருக சீர்ஷம், திருவாதிரை. புனர்பூசம், பூசம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, உத்திராடம், திருவோணம், அவிட்டம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங் கள். த்விதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி ஆகிய திதிகள். ரிஷபம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மீனம் ஆகிய லக்னங் கள் ஏற்றது. எட்டாமிடம் சுத்தமாக இருத்தல் அவசியம்.

தொடரும்...

**கேசகண்டமென்னும் முடியிறக்குதல்**

நல்ல உடல் நலத்துடன் நீண்ட ஆயுளுடன் வாழ, இச்சடங்கு மேற்கொள்ளப்படுகிறது. 3 அல்லது 5–ம் ஆண்டு செய்வது வழக்கம். வளர்பிறை மிகவும் ஏற்றது. த்விதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, திரயோதசி ஆகிய திதிகள். அஸ்வினி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, உத்திராடம், திருவோணம், அவிட்டம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள். திங்கள், புதன், வியாழன், வெள்ளிக் கிழமைகள். ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம், மகரம், மீனம் ஆகிய லக்னங்கள் ஏற்றது. எட்டாமிடம் சுத்தமாக இருத்தல் அவசியம். ஏழில் சூரியன், செவ்வாய் இருக்கக்கூடாது.





# தன்வந்தரி தியானம்

அச்யுதானந்த கோவிந்த
விஷ்ணோ நாராயணாம்ருத |
ரோகான்மே நாசயாசேஷான்
ஆஸு தன்வந்தரே ஹரே ||
ஆரோக்யம் தீர்கமாயுஷ்யம் பலம்
தேஜோ தியம் ச்ரியம் |
ஸ்வபக்தோஜ்யோ: னுக்ருஹ்ணன்தம்
வந்தே தன்வந்தரிம் ஹரிம் ||
தன்வந்தரேரிமம் ச்லோகம்
பக்த்யா நித்யம் படன்தியே |
அனாரோக்யம் ந தேஷாம்
ஸ்வாத் சுகம் ஜீவந்தி தே சிரம் ||

ஓம் நமோ பகவதே வாசுதேவாய தன்வந்தரயே
அம்ருதகலச ஹஸ்தாய வஜ்ரஜலௌகஹஸ்தாய |
சர்வாமயவிநாசநாய த்ரைலோக்யநாதாய
மஹாவிஷ்ணவே ஸ்வாஹா ||

ஓம் வாசுதேவாய வித்மஹே சுதாஹஸ்தாய தீமஹி
தன்னோ தன்வந்தரி:ப்ரசோதயாத்!

# ஸ்ரீவராக அஷ்டோத்தர சதநாமாவளி:

ஓம் ஸ்ரீவராஹாய நம:
ஓம் மஹீநாதாய நம:
ஓம் பூர்ணாநந்தாய நம:
ஓம் ஜகத்பதயே நம:
ஓம் நிர்குணாய நம:
ஓம் நிஷ்கலாய நம:
ஓம் அநந்தாய நம:
ஓம் தண்டகாந்தக்ருதே நம:
ஓம் அவ்யயாய நம:
ஓம் ஹிரண்யாக்ஷாந்தக்ருதே நம: (10)
ஓம் தேவாய நம:
ஓம் பூர்ணஷாட்குண்யவிக்ரஹாய நம:
ஓம் லயோததிவிஹாரிணே நம:
ஓம் ஸர்வப்ராணிஹிதேரதாய நம:
ஓம் அநந்தரூபாய நம:
ஓம் அனந்தச்ரியே நம:
ஓம் ஜிதமந்யவே நம:
ஓம் பயாபஹாய நம:
ஓம் வேதாந்தவேத்யாய நம:
ஓம் வேதிநே நம: (20)
ஓம் வேதகர்பாய நம:
ஓம் ஸநாதநாய நம:
ஓம் ஸஹஸ்ராக்ஷாய நம:
ஓம் புண்யகந்தாய நம:
ஓம் கல்பக்ருதே நம:
ஓம் க்ஷிதிப்ருதே நம:
ஓம் ஹரயே நம:
ஓம் பத்மநாபாய நம:
ஓம் ஸூராத்யக்ஷாய நம:
ஓம் ஹேமாங்காய நம: (30)
ஓம் தக்ஷிணாமுகாய நம:
ஓம் மஹாகோலாய நம:
ஓம் மஹாபாஹவே நம:
ஓம் ஸர்வதேவநமஸ்க்ருதாய நம:
ஓம் ஹ்ருஷீகேசாய நம:
ஓம் ப்ரஸந்நாத்மநே நம:
ஓம் ஸர்வபக்தபயாபஹாய நம:
ஓம் யஜ்ஞப்ருதே நம:
ஓம் யஜ்ஞக்ருதே நம:
ஓம் ஸாக்ஷிணே நம: (40)
ஓம் யஜ்ஞாங்காய நம:
ஓம் யஜ்ஞவாஹநாய நம:
ஓம் ஹவ்யபுஜே நம:
ஓம் ஹவ்யதேவாய நம:
ஓம் ஸதாவ்யக்தாய நம:
ஓம் க்ருபாகராய நம:
ஓம் தேவபூமிகுரவே நம:
ஓம் காந்தாய நம:
ஓம் தர்மகுஹ்யாய நம:
ஓம் வ்ருஷாகபயே நம: (50)
ஓம் ஸ்ருவதுண்டாய நம:
ஓம் வக்ரதம்ஷ்ட்ராய நம:
ஓம் நீலகேசாய நம:
ஓம் மஹாபலாய நம:
ஓம் பூதாத்மநே நம:
ஓம் வேதநேத்ரே நம:
ஓம் வேதேஹந்த்ருசிரோஹராய நம:
ஓம் வேதாந்தவிதே நம:
ஓம் வேதகுஹ்யாய நம:
ஓம் ஸர்வவேதப்ரவர்தகாய நம: (60)
ஓம் கபீராக்ஷாய நம:
ஓம் த்ரிதாம்நே நம:
ஓம் கபீராத்மநே நம:
ஓம் அமரேச்வராய நம:

ஓம் ஆநந்தவநகாய நம:
ஓம் திவ்யாய நம:
ஓம் ப்ரஹ்மநாஸாஸமுத்பவாய நம:
ஓம் ஸிந்து தீரநிவாஸிநே நம:
ஓம் க்ஷேமக்ருதே நம:
ஓம் ஸாத்த்வதாம் பதயே நம: (70)
ஓம் இந்த்ரத்ராத்ரே நம:
ஓம் ஜகத்த்ராத்ரே நம:
ஓம் இந்த்ரதோர்தண்டகர்வக்நே நம:
ஓம் பக்தவச்யாய நம:
ஓம் ஸதோத்யுக்தாய நம:
ஓம் நிஜாநந்தாய நம:
ஓம் ரமாபதயே நம:
ஓம் ச்ருதிப்ரியாய நம:
ஓம் சுபாங்காய நம
ஓம் புண்யச்ரவணகீர்தநாய நம: (80)
ஓம் ஸத்யக்ருதே நம:
ஓம் ஸத்யஸங்கல்பாய நம:
ஓம் ஸத்யவாசே நம:
ஓம் ஸத்யவிக்ரமாய நம:
ஓம் ஸத்யேநிகூடாய நம:
ஓம் ஸத்யாத்மநே நம:
ஓம் காலாதீதாய நம:
ஓம் குணாதிகாய நம:
ஓம் பரஸ்மை ஜ்யோதிஷே நம:
ஓம் பரஸ்மை தாம்நே நம: (90)
ஓம் பரம புருஷாய நம:
ஓம் பராய நம:
ஓம் கல்யாணக்ருதே நம:
ஓம் கவயே நம:
ஓம் கர்த்ரே நம:
ஓம் கர்மஸாக்ஷிணே நம:
ஓம் ஜிதேந்த்ரியாய நம:
ஓம் கர்மக்ருதே நம:
ஓம் கர்மகாண்டஸ்ய ஸம்ப்ரதாயப்ரவர்தகாய நம:
ஓம் ஸர்வாந்தகாய நம: (100)
ஓம் ஸர்வகாய நம:
ஓம் ஸர்வார்த்தாய நம:
ஓம் ஸர்வபக்ஷகாய நம:
ஓம் ஸர்வலோகபதயே நம:
ஓம் ஸ்ரீமதே ஸ்ரீமுஷ்ணேசாய நம:
ஓம் சுபேக்ஷணாய நம:
ஓம் ஸர்வதேவப்ரியாய நம:
ஓம் ஸாக்ஷிணே நம:

இதி ஸ்ரீவராக அஷ்டோத்தர சதநாமாவளி: சமாப்தா








22-08-2021 அன்று திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயத்தில் நவீனமயமாக்கப்பட்ட கண்ணாடி அறையை தி.தி.தே.செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள் துவக்கி வைத்தபோது. இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட திருப்பதி இணைச்செயலாட்சித்தலைவர் திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ்., தி.தி.நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர் திரு. பாலாஜி அவர்கள் மற்றும் உயர்அதிகாரிகள்





18-08-2021 முதல் 20-08-2021 வரை திருவேங்கடமுடையான் ஆலயத்தில் நடைபெற்ற பவித்ரோத்ஸவத்தில் பங்கு கொண்ட தி.தி.தே.செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். மற்றும் உயர்அதிகாரிகள்




30-08-2021 அன்று ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசாலையில் அகர்பத்திகள் தயாரிப்பதனை தனிக்கை செய்யும் தி.தி.தே.செயலாட்சித் தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ்.



30-08-2021 அன்று ஸ்ரீகிருஷ்ணாஷ்டமியை முன்னிட்டு ஸ்வாமிக்கு வெண்ணை தயாரிக்கும் சேவையில்(நவநீத சேவை) தி.தி.தே.செயலாட்சித்தலைவர், தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள்



# ஆழ்வார்கள் அநுபவித்த வாமன அவதாரம்

திரு. ஆர்.கண்ணன், பெங்களூர்
93433583416

வாமன திருவிக்ரமாவதாரங்களை அனைத்து ஆழ்வார்களும் அநுபவித்து தங்கள் பிரபந்தங்களில் போற்றிப் புகழ்ந்துள்ளனர். ஸ்ரீமந்நாராயணனின் பன்னிரு திருநாமங்களில் ஒரே அவதாரத்தைச் சேர்ந்த வாமன மற்றும் திருவிக்ரம திருநாமங்கள் இடம் பெற்றிருப்பது ஏற்றம் அல்லவா! அவற்றை சற்றே அநுபவிப்போம்.

முதலாழ்வார்களான பொய்கை, பூதத்தார் மற்றும் பேயார், திருக்கோவலூர் மிருகண்டு மஹரிஷியின் ஆசிரமத்தின் இடைக்கழியில் எம்பெருமானைக் கண்டனர். அவர்கள் திருவாக்கிலிருந்து மூன்று அந்தாதிப் பிரபந்தங்கள் தோன்றின. அந்த இடைக்கழி எம்பெருமான் தேஹளீசன்– தானே மூலவர் திருவிக்ரமனாக இன்றளவும் சேவை சாதித்தருளுகிறான். ஆகவே திருவிக்ரமன் சந்நிதியிலேயே நாலாயிர பிரபந்தம் தொடங்கிற்று என்றால் மிகையாகாது.

**பொய்கையாழ்வார் அருளிச்செய்தது**

*“பாரளவும் ஓரடி வைத்து ஓரடியும் பார் உடுத்த*
*நீரளவும் செல்ல நிமிர்ந்ததே - சூருருவின்*
*பேயளவு கண்ட பெருமான்! அறிகிலேன்*
*நீயளவு கண்ட நெறி*

– முதல் திருவந்தாதி –3

ஈரடியால் விண்ணையும், மண்ணையும் அளந்த உன் திவ்ய சேஷ்டிதங்களை அளவிட்டு அறிய முடியாது என்றபடி.

**பூதத்தாழ்வார் அருளிச்செய்தது**

*“அடி மூன்றில் இவ்வுலகம் அன்று அளந்தாய் போலும்*
*அடி மூன்று இரந்து அவனி கொண்டாய் - படி நின்ற*
*நீரோத மேனி நெடுமாலே! - நின்னடியை*
*யார் ஓதவல்லார் அறிந்து?*

– இரண்டாம் திருவந்தாதி –5

மகாபலியிடம் மூன்று அடி யாசித்து உலகங்களையெல்லாம் மூன்று அடியால் அளந்து கொண்டாய் போலும். நின் திருவடியை உள்ளபடி உணர்ந்து பேச வல்லார் யார்? என்றபடி.

**பேயாழ்வார் அருளிச்செய்தது**

*“படிவட்டத் தாமரை பண்டுலகம் நீரேற்று*
*அடிவட்டத்தால் அளப்ப நீண்ட-முடிவட்டம்*
*ஆகாயம் ஊடறுத்து அண்டம் போய் நீண்டதே*
*மாகாயமாய் நின்ற மாற்கு*

– மூன்றாம் திருவந்தாதி –13


மகாபலியிடம் பூமியைத் தானம் வாங்கிக்கொண்டு, எம்பெருமானுடைய திருமுடியானது மேல் உலகமெல்லாம் சென்று அண்டகடாகத்தளவு வளர்ந்ததே இது என்ன ஆச்சர்யம்! என்றபடி.

**திருமழிசைப்பிரான் அருளிச்செய்தது:**

*“அறிந்தறிந்து வாமனன் அடியிணை*
*வணங்கினால்*
*செறிந்து எழுந்தஞானமோடு*
*செல்வமும் சிறந்திடும்”*

– திருச்சந்தவிருத்தம் –74

வாமனாவதாரத்தின் ரகசியத்தை உள்ளபடி அறிந்து எம்பெருமான் திருவடியை போற்றிப் புகழ்ந்தால் ஆன்மீக ஞானம் மற்றும் ஐச்வர்யம் பெருகும்.



**நம்மாழ்வார் அருளிச்செய்தது:**

*"ஆழியெழச் சங்கும் வில்லும் எழ - திசை*
*வாழி எழதத் தண்டும் வாளுமெழ அண்டம்*
*மோழையெழ முடிபாதமெழ அப்பன்*
*ஊழியெழ உலகம் கொண்டவாறே"*

– திருவாய்மொழி 7–4–1

எம்பெருமான் வாமனனாக அவதரித்து திரு விக்ரமனாக வளர்ந்தபோது அவனுடைய சங்கு, சக்ரம், வில், கதை மற்றும் வாள் இவைகளும் உயர்ந்து மேலே சென்றனவாம். திருவடி அண்டகடாகத்தையும் தாண்டி மேலே சென்று உலகங்களையெல்லாம் தன்னுள் அடக்கிற்றாம். இப்படிப்பட்ட ஆச்சர்ய சேஷ்டிதங்களை அனுபவிப்பவர்களுக்கு வெற்றிகள் தானே வந்து சேரும் என்று இப்பதிகத்திற்கு பலச்ருதி செய்திருப்பது நோக்கத்தக்கது.

**பெரியாழ்வார் அருளிச்செய்தது:**

*"சத்திரம் ஏந்தித் தனி ஒரு மாணியாய்*
*உத்தரவேதியில் நின்ற ஒருவனை*
*கத்திரியர் காணக் காணி முற்றும் கொண்ட*
*பத்திராகாரன் புறம் புல்குவான்*
*பாரளந்தான் என் புறம் புல்குவான்"*

– பெரியாழ்வார் திருமொழி 1–9–6

எம்பெருமான் குறள் பிரம்மச்சாரி வாமனனாக அவதரித்து, அதற்குரிய சாதனங்களைத் தரித்து, தாழங்குடைப் பிடித்துக் கொண்டு, மகாபலியின் யாகசாலைக்குத் தான் ஒருவனாகத் தனியே சென்று அரசனிடம் மூவடி வேண்டிப் பெற்றான், அங்குள்ள க்ஷத்ரியர்களெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே உலகங்களையெல்லாம் தன் திருவடியால் அளந்து விட்டான். ஆகவே அவன் பாரளந்தான் என்றே போற்றப்பெறுகிறான்.

இவ்வாழ்வார் மகாபலி யாக சாலையில் நடந்த இரு வேறு நிகழ்ச்சிகளை அற்புதமாக அநுபவிக் கிறார்.

*"மிக்க பெரும் புகழ் மாவலி வேள்வியில்*
*தக்கதிதன்றென்று தானம் விலக்கிய*
*சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறிய*
*சக்கரக்கையனே! அச்சோ அச்சோ*
*சங்கமிடத்தானே! அச்சோ அச்சோ"*

– பெரியாழ்வார் திருமொழி 1–8–7

வந்திருப்பவன் மாயாவி விஷ்ணு. உன்னை ஏமாற்றி உன் செல்வத்தைப் பறிக்க வந்திருக்கிறான். தானம் செய்யாதே என்று குலகுருவான சுக்ராச்சாரியார் மாவலியைத் தடுத்தும் அவன் கேட்காத போது, அரசன் நீர் வார்க்க இருக்கும் பாத்திரத்தை ஒரு சிறு உருவில் அடைத்துக் கொண்டார். இதனை அறிந்த வாமனன் – எம்பெருமான் தன் கையிலிருந்த தர்ப்பை நுனியால் அவருடைய கண்ணைக் கிளறி அகற்றினான்.

*"என்ன இது மாயம்? என்னப்பன் அறிந்திலேன்*
*முன்னைய வண்ணமே கொண்டு அளவாய் என்ன*
*மன்னு நமுசியை வானில் சுழற்றிய*
*மின்னு முடியனே! அச்சோ அச்சோ*
*வேங்கடவாணனே! அச்சோ அச்சோ*

– பெரியாழ்வார் திருமொழி 1–8–8

எம்பெருமான் சிறிய உருவில் வந்து, பின்பு வளர்ந்தான். அப்போது உலகங்கள் அவன் திருவடிக்குப் போதவில்லை. அப்போது மகா பலியின் பிள்ளையான நமுசி, எம்பெருமானைப்

பார்த்து, "நீ மாயாவி என்பதை என் தந்தை மகாபலி அறிந்திருக்கவில்லை. முதலில் வாமன உருவில் வந்த அந்த சிறு அடியால் மூவடி அளந்து பெற்றுக்கொள்" என்று விதண்டாவாதம் பண்ணின நமுசியை எம்பெருமான் வானில் சுழற்றி வீசினான்.

## ஸ்ரீஆண்டாள் அநுபவித்த திருவிக்ரமாவதாரம்:

நாச்சியாருக்குத் திருவிக்ரமாவதாரத்தில் நல்ல ஈடுபாடுண்டு. எம்பெருமான் அளந்த மூன்று திருவடிக்கு திருப்பாவை மூன்று பாசுரங்களில் அற்புதமான விவரணம். *ஓங்கி உலகளந்த (3), அம்பரம் ஊடறுத்து (17)* மற்றும் *அன்று இவ்வுலகம் அளந்தாய் (24).*

1) *''ஓங்கி உலகளந்த உத்தமன்''* என்பதில் உத்தமன் என்பதற்கு ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை உரை மிக அற்புதமானது. "பிறரை அழித்து தம் வயிற்றை வளர்க்க வேண்டும் என்று இருப்பவன் அதமன். மிகவும் தாழ்ந்தவன்.

பிறரும் ஜீவிக்க வேணும், தாமும் ஜீவிக்க வேணும் என்று இருக்கு மவன் – மத்யமன். நடுத்தரமானவன்; தன்னை அழிய மாறி (தன்னைத் தாழவிட்டு) பிறர் ஜீவிக்குமவன் உத்தமன் – மிகச் சிறந்தவன்) எம்பெருமான் வாமனனாகி மூவடி யாசித்து தேவர்களின் காரியம் செய்தபடியால் அவனே உத்தமன்.

2. *''அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோமான்''* – எம்பெருமான், நித்யஸூரி நாயகன், தன்னுடைய சௌலப்யத்தைக் காட்டிக் கொண்டு, அண்ட கடாகங்களைத் தாண்டி வளர்ந்தான் என்று அருளிச் செய்தபடி.

3. *''அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி''* திருவிக்ரமாவதாரம் செய்து உலகங்களை எல்லாம் அளந்த திருவடிக்கு மங்களாசாசனம் செய்கிறாள் நாச்சியார்.

உலகளந்தவன்று பயன் பெற்ற தேவர்கள் எம்பெருமானுக்கு மங்களாசாசனம் செய்யாத இழவு தீர நாச்சியார் மங்களாசாசனம் செய்து உகக்கிறார் என்பது உரையாசிரியர்கள் விளக்கம்.



## தொண்டரடிப்பொடி ஆழ்வார் அநுபவம்

*"தாவி அன்று உலகமெல்லாம்*
*தலைவிளாக்கொண்ட எந்தாய்!*
*சேவியேன் உன்னையல்லால் சிக்கென மாலே!"*

– திருமாலை 35

உலகளந்து, ஏற்றத்தாழ்வின்றி எல்லோர் தலையிலும் திருவடி தானம் செய்த உத்தமனான உன்னையன்றி, புண்டரீகாக்ஷனான எம்பெருமானே! மற்றொருவரையும் நான் வணங்க மாட்டேன்– என்று உறுதியுடன் கூறுகிறார் ஆழ்வார்.

## திருப்பாணாழ்வார் அநுபவம்

*"உவந்த உள்ளத்தனாய் உலகமளந்து*
*அண்டமுற நிவந்த நீள் முடியன்"*

– அமலனாதிபிரான் 2

தன்னடியார்களாகிய இந்திராதி தேவர்கள் இழந்த ராஜ்யத்தைப் பெற்று மகிழும்படி தன் திருவடியால் மகாபலி தானம் செய்த உலகங்களை எல்லாம் அளந்து உகந்தான் எம்பெருமான் என்றபடி.

## திருமங்கை ஆழ்வார் அநுபவித்த திருவிக்ரம அவதாரம்

*"ஒண்மிதியில் புனலுருவி ஒரு கால் நிற்ப....*
*மலர் புரையும் திருவடியே வணங்கினேனே*

– திருநெடுந்தாண்டகம் –5

திருவிக்ரமாவதாரம் செய்தபோது, எம்பெருமானின் ஒரு திருவடி சந்திர மண்டலம், சூரிய மண்டலம் மற்றும் நட்சத்திர மண்டலம் இவைகளையும் தாண்டி அண்ட கடாகங்களையும் ஊடறுத்து மேலே சென்று விண்ணையெல்லாம் அளந்தது. மற்றொரு திருவடி மண்ணையெல்லாம் அளந்தது.

அப்படிப்பட்ட அவன் திருவடித் தாமரையை நான் வணங்கினேன் என்று ஆழ்வார் மகிழ்ச்சியுடன் அருளிச் செய்கிறார். இப்படி ஆழ்வார்கள் வாமனாவதாரத்தின் சிறப்பை அநுபவித்தபடியே எம்பெருமான் அநுகிரகத்தாலே நாமும் சற்றே அனுபவித்தோம்.

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**17. மத்ஸ்யாசனம் :**

மத்ஸ்யாசனம் அல்லது மச்சாசனம் என்ற யோக ஆசனம் செய்பவர் மீன் நீந்துவது போன்ற நிலையில் இருப்பர். மச்சம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு மீன் என்ற பொருளும் உண்டு. இந்த மீன் நிலையில் நீரில் நாம் இருந்தால் கை கால் உதவியின்றி அப்படியே மிதக்க முடியும். அதனால்தான் இது மத்ஸ்யாசனம் அல்லது மச்சாசனம் என்று பெயர் பெற்றுள்ளது.

இந்த ஆசனம் செய்து வந்தால் சுவாசக் கோளாறு பிரச்சனை நீங்கும். பிட்யூட்டரி தைராய்டு சுரப்பி பீனியல் சுரப்பி சீராக வைத்திருக்க மிகவும் உதவியாக இருக்கும்.

**18. யோக நித்ராசனம் :**

பத்மாசனத்தில் அமர்ந்து கொண்டு, முதுகுப் பக்கம் கைகளை கட்டிக் கொண்டு இடது கையின் மணிக்கட்டில் வலது கையால் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். பூமியை தொடும்படி நெற்றியையும் கையும் அமைப்பதே யோக நித்ர ஆசனம் என்பர்.

ஓய்வின்மை, பாதுகாப்பின்மை, வெறுப்பு, கவலை, மன உலைச்சல், பயத்திலிருந்து காக்கும். வயோதிகம் கட்டுப்படுத்தப்படும். தூக்கமின்மை விலகும்.

**19. தனுராசனம் :**

தனுர் என்றால் வில். வில்லைப் போல் உடலை வளைப்பதால் இந்த யோகாசனத்திற்கு தனுராசனம் என்ற பெயர் ஏற்பட்டது. பஸ்சிமோத்தாசனத்திற்கு மாற்று யோகாசனம் இது. ஒரு வில் போன்ற அமைப்பை உடைய ஆசனம். இந்த ஆசனம் செய்வதால் சுவாச உறுப்புகள் பலன் தரும். முதுகெலும்பைச் சார்ந்த பகுதிகளுக்கு இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. இந்த ஆசனத்தை செய்து வந்தால் எந்த வயதிலும் இளமையாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க முடியும்.

**20. கோமுகாசனம் :**


பசுவின் முகம் போன்ற தோற்றமுடைய ஆசனமாகும். மனம் மற்றும் உடலுக்கு அமைதியைக் கொடுக்கும். குறுகிய மார்பு விரிவடையும். கால்களுக்கு வலிமை கொடுக்கும். மூட்டு வலி வராமல் காக்கும். மனச்சோர்வு நீக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**21. பத்மாசனம் :**

பத்மம் என்றால் தாமரையை குறிக்கும். கமலம் என்றாலும் தாமரையைக் குறிக்கும். எனவே தான் இந்த ஆசனத்தை பத்மாசனம் என்றும் கமலாசனம் என்றும் கூறுவர். சோம்பலை தீர்த்து சுறுசுறுப்பை ஊட்டுகிறது. முழங்கால்களுக்கு நல்ல வலுவூட்டுகிறது.

# பதஞ்சலியின் ஆரோக்கிய ஆசனங்கள்

**டாக்டர் கி.ஜ. நிகிலா வெங்கட்**
**கோயம்பத்தூர், 8940991234**



குதிகால் நரம்புகள் மற்றும் தொடை பகுதிகளில் சக்தி மிகுந்ததாக ஆக்குகிறது. நிமிர்ந்து உட்கார்ந்து இருப்பதால் ஆழ்ந்த சுவாசம் கிடைக்கிறது. தியானத்திற்கு உகந்த நல்ல ஆசனம் இது.

**22. சர்வாங்காசனம் :**

சர்வம், அங்கம், ஆசனம் ஆகிய 3 வடமொழிச் சொற்களின் கூட்டுச் சொல்தான் சர்வாங்காசனம். சர்வம் என்றால் அனைத்தும் என்றும், அங்கம் என்றால் உறுப்பு என்றும், ஆசனம் என்றால் நிலை என்றும் பொருள் வழங்கப்படுகிறது.

அதாவது உடல் முழுதும் பயிற்சியில் ஈடுபடும் முறைதான் சர்வாங்காசனம். இரத்த மண்டலம், சுவாச மண்டலம் மற்றும் செரிமான உறுப்புகளுக்கு அதிக பலம் தரும். தொண்டைக்கு அதிக ரத்த ஓட்டத்தை அளித்து தைராய்டு பிரச்சனைகளை சரி செய்யும், நினைவாற்றலை அதிகரிக்க உதவும் ஆசனம் இது.

**23. பவன முக்தாசனம் :**

பவனம் என்றால் வாயு (காற்று). பவனமுக்தா சனம் என்றால் வாயுவின் செயல்பாடுகளை சரி செய்யக் கூடிய ஆசனம் என்று பொருள்.

பவன முக்தாசனம் செய்வதால் வயிற்று தசை களை வலுப்படுத்தும். செரிமான உறுப்புகளை தூண்டும் ஆற்றல் வாய்ந்தது. அதோடு வாயு பிரச் சனை இல்லாமல் செரிமான பகுதியை மேம்படுத் தும்.





**நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள் என்று பொருள் கொள்வர்; அதைவிட ஒன்பது வகைச் சக்தியாக சிவசக்தி பிரிந்து அருள் பாலிக்கிறாள் என்பது மிகப் பொருத்தம். அந்த ஒன்பது சக்திகளையும் மூன்று சக்திகளாகச் சுருக்கி, இச்சா சக்தியாக மலைமகளையும், கிரியா சக்தியாக அலைமகளையும், ஞானசக்தியாக கலைமகளையும் கொண்டாடுவதே நவராத்திரி. மகாளய அமாவாசை அடுத்தத் திதியான பிரதமை முதல் விஜயதசமி வரை நவராத்திரி நம் பாரத நாட்டில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. தேவியை பூஜிப்பதால் நாம் தெய்வீக சக்தியை பெற்று நம் வாழ்வில் தடை கற்களை கடந்து, தீய எண்ணங்களை விடுத்து நல்ல முறையில் சகல வளமும் பெற்று வாழ வழிவகுக்கும்.**

**நவராத்திரியில் "கொலு" வைத்தல் என்பது பாரம்பரியமான ஒன்று! உலகத்தில் உயிர்கள் பரிணாம வளர்ச்சியின் வழியே, விரிந்து, பரந்து விளைவை உண்டாக்குகின்றன. ஒவ்வொரு நாளும் அலங்கார அழகு பொலியும் கொலுவில் வீற்றிருக்கும் தெய்வங்களைப் போற்றி வணங்கிப் பழங்கள், சுண்டல் முதலிய படையல்கள் செய்து, குழந்தைகளுக்கும், சுமங்கலிகளுக்கும் கொடுத்து மகிழ்ந்து, ஆடல் பாடல்களோடு கொண்டாடப்படும் நவராத்திரி விழா.**



**இந்த நாட்களில் திருமலையில் பிரம்மோத்ஸவம் மிகவும் சிறப்பாக நடைபெறும். ஒவ்வொரு நாளும் திருமலையப்ப ஸ்வாமி ஒவ்வொரு வாக னத்தில் சிறப்பு அலங்காரங்களுடன் பவனி வருவது கண் கொள்ளாக் காட்சியாகும்.**

## திருமலை அனந்தாழ்வான் இயற்றிய

# "கோதா சதுச்லோகீ"

உ.வே. டாக்டர் அனந்த பத்மநாபாசாரியார் ஸ்வாமி,
சென்னை, 99620 11293.



*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**தனியன்**

சக்ரே கோதாசதுச்லோகீம் யோ
வேதார்த்த ப்ரகர்ப்பிதம் ।
ஸ்ரீவேங்கடேச ஸத்பக்தம் தம்
அநந்தகுரும் பஜே॥

பொருள் : வேதத்தின் பொருளைத் தன்னுள் கொண்ட கோதா சதுச்லோகீ என்னும் துதியை அருளிச் செய்தவரும், திருமலை வேங்கடேசனின் பக்தரான வருமான அனந்தார்ய குருவை போற்றித் தொழுகிறேன்.

நித்யா பூஷாநிகம ரஸாம் நிஸ்
ஸமோத்துங்க வார்த்தா
காந்தோ யஸ்யா: கசவிலு லிதை:
காமுகோ மால்ய ரத்நை: ।
ஸூக்த்யா யஸ்யா: ச்ருதி ஸுபகயா
ஸுப்ரபாதா தரித்ரீ
ஸைஷா தேவீ ஸகல ஜனனீ
ஸிஞ்சதாம் மாமபாங்கை ॥

எந்த (பாடவல்ல) நாச்சியாரது இணையற்ற மேலான அருளிச் செயலானது வேதத்தின் உச்சியான வேதாந்தத்துக்கு நித்யபூஷணமாய் (அதை விளங்க வைப்பதாக) ஆகிறதோ, எந்த நாச்சியாருடைய காதலன் (எம்பெருமான்) அவள் குழலினின்று களைந்த அழகிய பூமாலையில் மிக்க ஆசையுடையவனாயுள்ளானோ, எந்த தேவியின் ச்ருதிகள் போன்ற மங்களமான திருவாக்கினாலே பூமி (உலகத்தவர்) நல்விடிவுள்ளதாக ஆகிறதோ அப்படிப் பட்ட லோகமாதாவான இந்த நாச்சியார் அடியேனைத் தமது கடாக்ஷமாகிற அம்ருதவர்ஷத்தால் நனையச் செய்ய வேணும்.

மாதா சேத் துலஸீ பிதாயதி தவ ஸ்ரீவிஷ்ணு சித்தோ மஹாந்
ப்ராத சேத் யதி கர ப்ரியதம ஸ்ரீரங்க தாமா யதி।
ஜ்ஞாதார ஸ்தனயாஸ் த்வதுக்தி ஸரஸ ஸ்தன்யேன
ஸம்வர்த்திதா:
கோதா தேவி கதம் த்வம் அந்யஸுலபா ஸாதாரணா
ஸ்ரீரஸி॥

ஸ்ரீகோதா தேவியாரே! உமது தாயோயெனில் துளசிச் செடி தந்தை பரமபாகவதோத்தமரான ஸ்ரீவிஷ்ணு சித்தர் (பட்டர் பிரான் – பெரியாழ்வார்) தமையனார் யதிராஜரான ஸ்ரீராமாநுஜர். உமக்கு மிகவும் பிரியமானவர் (ப்ராணநாதர்) ஸ்ரீரங்கநாதனான பெரிய பெருமாள். உமது பிள்ளைகள் உமது பாடல்களாகிய மதுரமான ஸ்தந்யத்தைப் (முலைப்பாலைப்) பருகி வளர்க்கப் பட்ட ஜ்ஞாநவான்கள். நீர் எங்ஙனம் ஸாமாந்ய ஜனங்களுக்கு (அறிவில்லாதவர்க்கு) கிட்டத் தகுந்த நிதியாக ஆவீர்?

*கல்பாதௌ ஹரிணாஸ்வயம் ஜனஹிதம்*
*த்ருஷ்ட்வைவ ஸர்வாத்மநாம்*
*ப்ரோக்தம் ஸ்வஸ்ய ச கீர்த்தனம் பிரபதனம்*
*ஸ்வஸ்மை பிரஸூ நார்ப்பணம்।*
*ஸர்வேஷாம் ப்ரகடம் விதாது மனி ம் ஸ்ரீதந்வி*
*நவ்யே புரே*
*ஜாதாம் வைதிக விஷ்ணு சித்த தநயாம் கோதாம்*
*உதாராம் ஸ்துமே: ॥*

கல்பத்தின் ஆதியில் (முதலில்) எம்பெருமானால் உலகர்கள் யாவருடைய உஜ்ஜீவநத்தை மனதிற்கொண்டு, தன்னையேத்திப் பாடுதல், ஆச்ரயித்தல், பூவிட்டு அர்ச்சித்தல் சொல்லப்பட்டது.

அதை கேட்ட பூமிபிராட்டி இவற்றை உலக மக்கள் யாவரும் எப்போதும் அறியும்படி செய்வதற்காக ஸ்ரீவில்லி புத்தூரிலே பரமவைதிகரான ஸ்ரீவிஷ்ணுசித்தரெனும் ஆழ்வார் திருமகளாக வந்து பிறந்த பரம உதார குணமுடைய ஸ்ரீகோதா தேவியை நமஸ்கரிக்கிறோம்.

*ஆகூதஸ்ய பரிஷ்க்ரியாம் அநுபமாம் ஆசேஸநம்*
*சக்ஷூஷோ:*
*ஆனந்தஸ்ய பரம்பராம் அநுகுணாம் ஆரம லே*
*து: ।*
*தத்தோர்மத்ய க்ரீடகோடி கடித ஸ்வோச்சிஷ்ட*
*கஸ்தூரிகா*
*மால்யாமோத ஸமேதிதாத்ம விபதாம் கோதாம்*
*உதாராம் ஸ்துமே:॥*

சோலை மலை மணாளனுடைய அபிப்ராயம் நிறைந்த செயல்களுக்கு இணையற்ற அழகூட்டுமவளாயும், காணும் கண்களுக்கு மிக்க மகிழ்ச்சியையுண்டு பண்ணுமவளாயும், அவனுக்கு எவ்விதத்திலும் தக்கவளாய் நிரந்தர ஆனந்தவெள்ள மூட்டும் படி அவனது தன் மார்பின் மேலும், சுடர்முடி மேலும், அணியும் தான் சூடிக் களைந்த குங்குமம் (கஸ்தூரி), பூமாலைகளின் நன்மணத்தினால் பெருகும் வைபவத்தையுடையளாய், உதார வாக்கை உடையவளான கோதை நாச்சியாரைப் பாடி ஏத்துகிறோம் (துதிக்கிறோம்).



**கோதா மங்களம் :**

*ஸ்வோச்சிஷ்ட மாலிகாபந்த கந்தபந்துர*
*ஜிஷ்ணவே*
*விஷ்ணு சித்த தநுஜாயை கோதாயை நித்ய*
*மங்களம் ॥1॥*

தான் சூடிக்களைந்த பூமாலைகளினால் எம்பெருமானை மகிழப் பண்ணும் பெரும்புகழ் படைத்த ஆழ்வார் திருமகள் கோதை நாச்சியாருக்கு நித்ய மங்களம்.

*மாத்ருசா கிஞ்ச்ந த்ராண பத்த கங்கண பாணயே*
*விஷ்ணு சித்த தநுஜாயை கோதாயை நித்ய*
*மங்களம் ॥2॥*

நம் போன்ற புகலற்ற மாந்தரை ரக்ஷிப்பதில் மாறா வ்ரதம் பூண்டுள்ள பெரியாழ்வார் பெண் பிள்ளையான ஸ்ரீஆண்டாளுக்கு நித்ய மங்களம்.

*ஸ்ரீமத்யை விஷ்ணு சித்தார்ய மநோ நந்தந*
*ஹேதவே*
*நந்த நந்தந ஸூந்தர்யை கோதாயை நித்ய*
*மங்களம் ॥3॥*

ஸ்ரீவிஷ்ணுசித்தரான பெரியாழ்வாரின் மன மகிழ்ச்சிக்குக் காரணமாகவும், கண்ணபிரானுக்கு இன்பம் விளைவிக்கும் அழகியுமான கோதை பிராட்டிக்கு நித்ய மங்களம்.

*கர்கடே பூர்வபல்குந்யாம் துளஸீகாநநோத்பவாம்*
*பாண்ட்யே விச்வம்பராம் கோதாம் வந்தே*
*ஸ்ரீரங்கநாயகீம் ॥4॥*

பட்டர்பிரான் கோதை திருவடிகளே சரணம்
ஸ்ரீஅநந்தார்யா மஹாகுரவே நம:

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | ஸ்ரீஅநந்த பத்மநாபன், பள்ளிகொண்ட திருக் கோலம், அனந்த சயனம்; புஜங்க சயனம்: கிழக்கே பார்த்த திருமுக மண்டலம், கர்பக்கிருகத்துக்கு மூன்று வாசல்கள். இடது பக்க வாசல்– திருமுடி சேவை, நடுப்பக்க வாசல் – திருவுந்தித் தாமரை மலர், பிரம்மா, பகவானின் திருமேனி சேவை, வலப் பக்க வாசல் திருவடி சேவை. |
| தாயார் | : | ஹரிலக்ஷ்மி தாயார். |
| புஷ்கரணி | : | – |
| விமாநம் | : | ஹேமகூட விமாநம் |
| தீர்த்தம் | : | மத்ஸ்யதீர்த்தம், வராக தீர்த்தம், பத்மதீர்த்தம். |
| ப்ரத்யக்ஷம் | : | ஏகாதச ருத்ரர்கள், இந்திரன், சந்திரன், திவாகர மகரிஷி, வில்வமங்கல சுவாமிகள். |
| ஆகமம் | : | “தந்த்ர சமுச்சயம்” என்கிற முறைப்படி விஷ்ணு சம்ஹிதையில் உள்ளவாறு ஆராதனம் நடைபெறுகிறது. இங்கு அர்ச்சகர்கள் நம்பூதிரிகள் எனப் படுவர். எல்லா திவ்ய தேசங்களிலும் வழிபாட்டு முறைகளை ஒழுங்கு படுத் திய ஸ்ரீராமாநுஜர் அவ்வாறு செய்ய, இந்தத் திவ்ய தேசத்துக்கு வந்தபோது, நம்பூதிரிகள் கவலையுடன் இப்போது நடைபெறும் பூஜை முறையே தொடர்ந்து நடைபெற அருள் புரிய வேண்டும் என்று ஸ்ரீ அனந்தபத்ம நாபனை வேண்டியதாகவும், பகவான், திருவனந்தபுரத்துக்கு வந்த உடையவரை அவரே அறியாதபடி, திருக்குறுங்குடிக் கோயிலில் சேர்ப்பித் ததாகவும், அதனால் பாஞ்சராத்ர, வைகானஸ ஆகம வழிபாடு இங்கு இல்லை என்று சொல்வர். ஸ்ரீயோக ந்ருஸிம்ஹன், ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவன், ஸ்ரீ ஸ்ரீநிவாசன், ஸ்ரீகிருஷ்ணன் சந்நிதிக ளும், ஸ்ரீ ஆஞ்சநேயர் சன்னதியும் உள் ளன. இந்தத் திவ்ய தேசத்தில் “அநந்த சயன விரதம்” மிகவும் விசேஷமான விரதம். |
| மங்களாசாசனம் | : | ஸ்ரீநம்மாழ்வார், (ஸ்வாமி தேசிகனும் மங்களாசாசனம் செய்திருப்பதாகச் சொல்வர்) |

**விசேஷம் :**

ஒரு சமயம், திருவரங்கத்தில், அத்யயன உத்ஸ வத்தில் *“நடமினோ நமர்கள் உள்ளீர்”* (திருவாய் மொழி

108 திவ்விய தேச வைபவம்

# 61 திருவனந்தபுரம்

– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.





### த்யானச்லோகம்

*க்யாதேநந்தபுரே ஹ்யநந்த சயநோ*
*லக்ஷ்மீபதி: ப்ராங்முக:*
*புண்யே மத்ஸ்யரைஸ்தடே*
*ப்ரவிலஸச்ச்ரீ ஹேம கூடாலய:।*
*நித்யம் தார்மிக கேரளேச வரத: ஸ்ரீ*
*பத்மநாப: ப்ரபு:*
*ஸாக்ஷாத்த்ர்யக்ஷ ஸமர்ச்சிதோ*
*குருதநு: த்வாரத்ரயே ஸேவ்யதே ।।*

10–2–8) என்கிற பாசுரத்துக்கு, அரையர் அபிநயம் செய்து காட்ட, ஸ்ரீ ஆளவந்தார், இதுவே ஆழ்வாரின் ஆணை என்று உடனே இவ்வூருக்கு வந்தாராம். இது வரலாறு கூறுகிற செய்தி. அனுமனுக்கு வெண்ணெய் சாத்துவார்கள். இது எவ்வளவு வெப்பத்திலும் உருகாது, எந்தப் பிராணியும் தீண்டாது. அவ்வளவு சக்தி வாய்ந்த அனுமன் என்பர்.

*“புண்ணியம்செய்து நல்ல புனலொடு*
*மலர்கள்தூவி,*
*எண்ணுமின் எந்தைநாமம் இப்பிறப்பு*
*அறுக்குமப்பால்*
*திண்ணம்நாம் அறியச்சொன்னோம் செறிபொழில்*
*அனந்தபுரத்து*
*அண்ணலார் கமலபாதம் அணுகுவார்அமரராவார்”.*

– நம்மாழ்வார்

*“கோளார் பொறி ஐந்தும் குன்றி, உடலம்*
*பழுத்து,*
*மாளாமுன் நெஞ்சே வணங்குதியால் - கேளார்*
*சினந்தபுரம் சுட்டான், திசை முகத்தான்போற்றும்*
*அனந்தபுரம் சேர்ந்தான் அடி”*

–பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் பாசுரம்

### நாமாக்கள்

561. *ஓம் புஷ்கராக்ஷ:நம:*

கருணைபொழிகின்ற செந்தாமரைக் கண்ணனே

*ஓம் ஸுதர்ஸிந்யை நம:*

தியான நிலையிலேயே நேரில் தரிசிப்பதைப் போன்று க்ருபை செய்பவளே

562. *ஓம் மஹா மநா: நம:*

பக்தர்களிடம் பெருத்த மனமுள்ளவனே



## ஸ்ரீஅனந்தபத்மநாப ஸ்வாமி ஆலய விசேஷம் :



ஐப்பசி, திருவோணம் “திரு ஆராட்டு விழா” என்று சிறப்பாக ஒவ்வொரு வருடமும் நடைபெறுகிறது. கருடவாகனத்தில், எம்பெருமான் எழுந்தருள, அரசர்களுக்கே உரிய சின்னங்களுடன், திருவனந்தபுரம் ராஜாவே வாளை ஏந்திக் கொண்டு, முன்னாலே செல்ல பல மைல்கள் இப்படி பவனியாக வந்து, சமுத்ரக்கரையில் தீர்த்தவாரி நடக்கும் அத்புதக் காட்சி, பரவசத்தில் ஆட்படுத்தும் புனிதக் காட்சி. சித்திரை மாத உத்ஸவங்களும் பிரசித்தி பெற்றவை. “ஆசார்ய ஹ்ருதயம்” இந்த எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களைச் சொல்லும் அழகே அருமை,



ஓம் ப்ரதீத்யை நம:

எப்போதும் மகிழ்வுடன் இருப்பவளே

563. ஓம்பகவாந் நம:

எவ்வித தோஷமில்லாத கல்யாண குணரூபனே

ஓம் ஐதத்யை நம:

உலகத்துக்கு மூலப் பொருளாக இருந்து உலகைப் படைத்து உலகமாக இருப்பவளே

564. ஓம் பகஹா நம:

கல்யாண குணங்களை உடையவனே

ஓம் வந்ய தாரிண்யை நம:

உலகத்துக்குத் தேவையான சபூதங்களையும் அதன் ஸுக்ஷமங்களையும் வனமாலையாகத் தரிப்பவளே

565. ஓம் நந்தீ நம:

நந்தனைத் தகப்பனாராக அடைந்தவனே

ஓம் கலிநாஸிந்யை நம:

கலகத்துக்குக் காரணமான கலியை அழிப்பவளே

566. ஓம் வநமாலீ நம:

வைஜெயந்தீ மாலையை அணிந்தவனே

ஓம் அயோத்யாயை நம:

பிறரால் அடைய இயலாத தலைநகரான ஸ்ரீவைகுண்டத்தை உடையவளே

567. ஓம் ஹலாயுத: நம:

பலராம அவதாரத்தில் கலப்பையை ஆயுதமாக ஏந்தியவனே

ஓம் அச்சிந்த ஸந்தாநாயை நம:

தன்னைத் துதிப்பவர்களின் வம்சபரம்பரை விஸ்தாரமாக வளரும்படி அநுக்ரகிப்பவளே

568. ஓம் ஆதித்ய: நம:

அதிதி, தேவகியாக இருந்தபோது அவள் குமாரனே

ஓம் மஹாரத்நாயை நம:

மகிழ்ச்சி அளிக்கும் உயர்ந்த வஸ்துக்களை வழங்குபவளே

569. ஓம் ஜ்யோதிராதித்ய நம:

திவ்ய, விசித்ர சூரியனே

ஓம் ஸுகாவஹாயை நம:

எல்லா விஷயங்களிலும் அனுகூலத்தையே செய்பவளே

570. ஓம் ஸஹிஷ்ணு: நம:

பக்தர்களின் குற்றங்களை மன்னிப்பவனே

ஓம்ராஜவத்யை நம:

தன் சொல்கேட்டு, தன்னை அடைந்தவர்களின் வினைகளைக் கருதாது அருளும் பகவானைத் தன்வசமாக்கி கொண்டவளே.

ஸ்ரீமதே ஸ்ரீ ஹரி லக்ஷ்மீநாயிகா ஸமேத
ஸ்ரீ அனந்த பத்மநாப பரப்ரஹ்மணே நம:

**குறிப்பு :**

திருவனந்தபுரம், சென்ட்ரல் ரயில்வே நிலையத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

திவ்ய தேச வைபவம் வளரும்...

**வாசகர்களே...**

**ஏழு மலைகள் நிறைந்த திருமலையில் நித்திய வாசம் செய்யும் கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் தங்களுடைய வாழ்வில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் அதாவது ஸ்வாமியின் திருலீலைகளை ஸப்தகிரி பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏதுவாக அதை எழுதி ஸப்தகிரி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

*எங்கள் முகவரி :*

**பிரதான ஆசிரியர்,**
**“ஸப்தகிரி”, தி.தி.தே.,**
**கபிலத்தீர்த்தம் சாலை, திருப்பதி - 517 507.**
**0877- 2264543, 2264359.**

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

## உய்யக்கொண்டார் வாழித்திருநாமம்...

பராபவ வருடம் (886) சித்திரை மாதத்தில் வெள்ளிக்கிழமை, பௌர்ணமி அன்று கார்த்திகை நட்சத்திரத்தில் அவதரித்தவர் உய்யக் கொண்டார் என்னும் ஆசார்யர். இவர் திருவரங்கத்துக்கு வடக்கே உள்ள திருவெள்ளறையில் பூர்வசிகை ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மண குலத்தில் அவதரித்தவர். இவருக்கு புண்டரீகாக்ஷர், பத்மாக்ஷர், ராஜீவாக்ஷர், அரவிந்தாக்ஷர் என்று பல திருநாமங்கள். இவருடைய சீடர்கள் ஸ்ரீராமன் என்னும் மணக்கால் நம்பி, திருவல்லிக்கேணி பாண்பெருமாள் அரையர், சேட்டலூர் செண்டலங்காரதாஸர், ஸ்ரீபுண்டரீகதாஸர், கோமடம் திரு விண்ணகரப்பன் மற்றும் உலக பெருமாள் நங்கை ஆகியோராவர். இவர் ஆண்டாள் அருளிய திருப் பாவைக்குத் தமிழில் இரண்டு தனியன்கள் அருளியுள்ளார்.

*வாலவெய்யோன்தனை வென்ற வடிவழகன் வாழியே*
*மால் மணக்கால் நம்பி தொழு மலர்ப் பதத்தோன் வாழியே*
*சீலமிகு நாதமுனி சீருரைப்போன் வாழியே*
*சித்திரையில் கார்த்திகை நாள் சிறக்க வந்தோன் வாழியே*
*நாலிரண்டும் ஐயைந்தும் நமக்குரைத்தான் வாழியே*
*நாலெட்டின் உட்பொருளை நடத்தினான் வாழியே*
*மாலரங்க மணவாளர் வளமுரைப்போன் வாழியே*
*வையமுய்யக் கொண்டவர்தாள் வையகத்தில் வாழியே*

**பதவுரை :**

வாலவெய்யோன்தனை – உதய கால சூரியனை, வென்ற வடிவழகன் – வென்ற திருமேனி அழகையுடையவர், வாழியே – வாழ வேண்டும்; மால் – பெருமை பொருந்திய, – மணக்கால் நம்பி, தொழும்– வணங்கும், மலர்ப்பதத்தோன் – மலர்தலையுடைய திருவடிகளை உடையவர்; சீலமிகு – நல்ல குணம் மிக்க, நாதமுனி – ஸ்ரீமந்நாதமுனிகள் சீர் – குணங் களை, உரைப்போன் – சொல்லுபவர்; சித்திரையில் – சித்திரை மாதத்தில், கார்த்திகை நாள் – கார்த்திகை நட்சத்திரத்தில், சிறக்க வந்தோன் – பெருமை பெற தோன்றியவர்; நாலிரண்டும் – எட்டு எழுத்து மந்திர மான திருமந்திரத்தையும், ஐயைந்தும் – இருபத்து ஐந்து எழுத்தான துவய மந்திரத்தையும், நமக்கு உரைத்தான் – நமக்காக வழிவழியாகப் பரம்பரை யாக வரும்படி செய்தவர்; நாலெட்டின் – முப்பத்து



இரண்டு எழுத்தான சரமச்லோகத்தின், உட் பொருளை – ஆழ்ந்த பொருளை, நடத்தினான் – வழி வழியாக உபதேசித்தவர்; மால் – பெருமை தங்கிய, அரங்க மணவாளர் – திருவரங்கனான நம்பெருமாள், வளம் – அழகை, உரைப்போன் – உரைப்பவர்; வையம் – உலகம், உய்யக் கொண்டவர் – உயர்ந்த ஜீவனம் பெற விரும்பியவர், தாள் – திருவடிகள், வைய கத்தில் – இவ்வுலகில் வாழ பல்லாண்டு பாடு வோமாக.

**சிறப்புரை :**

(வாலவெய்யோன்தனை வென்ற வடிவழகன்) – வாலவெய்யோன் – உதயகால சூரியன். தன்னை என்பது தனை ஆயிற்று. உதயகால சூரியனையும் வென்ற வடிவழகை உடையவர் உய்யக்கொண்டார் என்றபடி. ***''ஸுத்தஸத்வமயம் சௌரேரவதார மிவாபரம்''*** என்று வேதாந்த தேசிகர் யதிராஜ சப்ததி யில் (6) அருளியதற்கு ஏற்ப உய்யக் கொண்டார் சுத்த ஸத்வமயமாயும் எம்பெருமானுடைய திவ்ய அவதாரங்கள் போல் சுத்த ஸத்வ குணமயமாக விளங்கி இருப்பவர் என்பதனால் உதயகால சூரியனைக் காட்டிலும் வடிவழகன் என்றபடி.

இந்த சுலோகம் பெரிய திருமுடி அடைவிலும், யதிராஜ ஸப்ததியிலும் காணலாம். பெற்றோர்கள் அவருடைய தூய ஸத்வமயமான திருமேனியையும் தாமரை போன்ற திருக்கண்களையும் கண்டு திருவெள்ளறை எம்பெருமானான அப்புண்டரீ காக்ஷனே அவதரித்துள்ளான் போலும் என்று எண்ணி புண்டரீகாக்ஷர் என்று பெயரிட்டனர்.

"அவர் தாம் புண்டரீகாக்ஷரன்றோ. ***''புண்டரீக த்ருசே நம:''*** என்றாயிற்று என்பர் பிள்ளைலோகம் சீயர். இது பற்றியே ஒன்றான எம்பார் ஜீயர் ஸ்வாமி, எம்பெருமானார் அவயவ சுலோகத்தில் புண்டரீகாக்ஷ ரான இவரை ***''நேத்ரயுக்மம் ஸரோஜாக்ஷ:''*** என்கிற படியே எம்பெருமானாருக்கு இரு கண்களாகத் திகழ்பவர் உய்யக் கொண்டார் என்று உரைப்பர்.

(மால் மணக்கால் நம்பி தொழும் மலர்ப் பதத் தோன்) – மால் – பெருமை. மணக்கால் நம்பி – உய்யக் கொண்டாரின் சீடர். மணக்கால் நம்பிக்கு பெருமை யாவது பன்னிரெண்டு வருடம் தம் ஆசார்யரான உய்யக்கொண்டார் திருவடிகளில் எல்லாவித கைங்கர்யங்களையும் செய்தவர். ஒரு நாள்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருப்பதியில் தரிசிக்க வேண்டிய ஆலயங்கள்

**ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில் :**

இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமாநுஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சியளிக் கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்தசாரதி மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக் கோயிலில் இடம் பெற்றுள்ளனர்.

☎ *0877–2264592.*

**ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் :**

இக்கோயில் திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக் கோயில் ஸ்ரீராமர் லக்ஷ்மணர் மற்றும் சீதை இலங்கையிலிருந்து திரும்பி வரும்போது திருப்பதிக்கு வந்ததின் நினைவாக எழுப்பப்பட்டதாகும். ☎ *0877–2264584.*

**ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி கோயில் :**

இங்கு அமைந்திருக்கும் சிவன் கோயில் திருப்பதி நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கபிலமஹரிஷி யால் இங்குள்ள சிவலிங்கம் தோற்று விக்கப்பட்டதால் இந்த மூலவருக்கு கபிலேஸ்வரர் என்று பெயர் வந்தது. இங்கு உள்ள தீர்த்தமும் கபிலதீர்த்தம் என்றே அழைக்கப் படுகிறது. ☎ *0877– 2264587.*

**அலர்மேல்மங்காபுரம் (திருச்சானூர்) :**

இது திருப்பதிக்கு 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதுவும் பழமை வாய்ந்த புனிதத் திருத்தலமாகும். திருவேங்கடவனின் தேவியான ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவராக இக் கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

☎ *0877–2264586.*

**திருப்பதி சுற்றுப்பகுதிகளில் உள்ள தி.தி.தே. ஆலய அமைவிடம் திருப்பதி ஆர்.டி.சி. பேருந்து நிலையத்திலிருந்து கி.மீ.களில்**

1) ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருச்சானூர் ...05 கி.மீ.
2) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், ஸ்ரீநிவாச மங்காபுரம்...12 கி.மீ.
3) ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம், திருப்பதி ...01 கி.மீ.
4) ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலயம், திருப்பதி...2.3 கி.மீ.
5) ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயம், திருப்பதி...03 கி.மீ.
6) ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்பாய குண்டா...18 கி.மீ.
7) ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம், நாகுலாபுரம்...65 கி.மீ.
8) ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், நாராயண வனம்...37 கி.மீ.
9) ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி ஆலயம், கார்வேடி நகரம்...48 கி.மீ.
10) ஸ்ரீகோதண்டராமாலயம், ஒண்டிமிட்டா, கடப்பா மாவட்டம்...116 கி.மீ.

உய்யக்கொண்டார் தேவிகளான ஆண்டாளம்மா பரமபதிக்க, திருமாளிகை கைங்கர்யமெல்லாம் மணக்கால் நம்பி தமக்கே பரமாய் நடத்திக் கொண்டு வரும்போது, தம் ஆசார்யரின் பெண் பிள்ளைகள் இருவரையும் நீராட்டி அழைத்து வரும் வழியிலே வாய்க்கால் சேறாயிருக்கக் கண்டு அவர்கள் திகைக்க, நம்பிகள் படியாய்க் கிடந்து அவர்களைத் தம் முதுகிலே அடியிட்டு அழைத்துக் கொண்டு போனார்.

உய்யக் கொண்டாரும் இந்த விஷயத்தைக் கேட்டு "இப்படி செய்வதே" என்று மிகவும் ப்ரீதி அடைந்தவராய், நம்பிகள் தலையை தம் திருவடித் தாமரைகளாலே அலங்கரித்தார். பொன்னடிப்பூ முடிசூட்டி "உமக்கு நாம் செய்ய வேண்டுவது என்ன" என்று கேட்க, நம்பியும் *''உற்றேன் உகந்து பணி செய்து உனபாதம் பெற்றேன்''* என்றார்.

மேலும் இரண்டாவது தடவை துவய மந்த்ரத்தை உபதேசித்தார். ஆசார்ய பெண் பிள்ளைகளின் மணக்கால் பொலிய நின்ற திருமேனியை உடையவராய் இருந்ததால் அன்று முதல் "ராமமிச்ரர்" என்ற இயற் பெயரையுடையரான இவருக்கு "மணக்கால் நம்பி" என்ற திருநாமம் உடையவரானார். அவர் தலையில் உய்யக்கொண்டார் திருவடிகள் அலங்கரிக்கப் பட்டது பற்றி *''நம்பி தொழும் மலர்ப் பதத்தோன்''* என்றபடி.

(சீலமிகு நாதமுனி சீருரைப்போன்) சீலமாவது நல்ல குணம். அதை மிகுதியாக உடையவர் ஸ்ரீமந்நாத முனிகள். சீராவது பெருமை. ஸ்ரீமந்நாதமுனிக ளுக்குப் பெருமையாவது உய்யக் கொண்டாரைக் கொண்டு திவ்வியப்பிரபந்தத்தை உலகம் முழுவதும் பரவச் செய்ததாகும். மேலும் "குளப்படியிலே தேங்கி னால் குருவி குடித்துப்போம், வீராணத்து ஏரியிலே தேங்கினால் நாடு விளையும்" என்று ஸ்ரீமந்நாதமுனி களும் தம் சீலகுணத்தால் உய்யக்கொண்டாருக்கு திவ்வியப் பிரபந்தத்தை அருளிச் செய்தார்.

அதாவது ஒரு மாட்டின் குளம்பின் அடியிலே மழைநீர் தேங்கும் போது சில குருவிகள் குடிக்க உதவும். அதே மழைநீர் வீரநாராயணபுரத்து ஏரியில் தேங்கினால் அந்நாட்டிலுள்ள வயலெல்லாம் விளைந்து நாடே வாழும்.

எம்பெருமானாருடைய சீடரான எம்பார் அருளிய *''லக்ஷ்மீ நாதாக்ய ஸிந்தௌ''* என்ற சுலோகத்தில் லக்ஷ்மீநாதனாகிற பெருங்கடலில் சடகோபராகிய மேகம், கருணை நீரைப் பருகி ஸ்ரீமந்நாதமுனிகளாகிற மலையில் பொழிந்து, அந்நீர் புண்டரீகாக்ஷர் என்னும் உய்யக்கொண்டார், ராம மிச்ரர் என்னும் மணக்கால் நம்பி ஆகிய இரு அருவி களின் மூலம் மேலும் பாய்ந்து கொண்டு வந்தது என்று அருளியது காணலாம்.

வாழித்திருநாமம் வளரும்...

# கருவேலம்

தெலுங்கு மூலம் : டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் : திருமதி வி.உஷா, 99850 02156

அனைத்து இடங்களிலும் வளரக் கூடிய மருத்துவ குணம் மிக்க மரம் – கருவேலம். இம்மரம் இல்லாத இடம் இருக்காது.

சமஸ்க்ருதத்தில் பப்பூலா என்றும், ஆங்கிலத்தில் படுல் என்றும், இண்டியன் கம் அரபிக் ட்ரீ என்றும், தெலுங்கில் நல்லதும்மா என்றும், ஹிந்தியில் பப்புல் என்றும் அழைக்கின்றனர். மைமோசேசி என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்த இதன் அறிவியல் பெயர் அகேஷியா அரபிக் என்பதாகும். இதன் இலைகள் சிறு இலைகளாலும் முட்களுடனும் இருக்கும். மஞ்சள் நிற மலர்களையும், சாம்பல் நிற நீண்ட காய்களையும் கொண்டிருக்கும். கருவேலம் பொடி, கருவேலம் கோந்துப் பொடி ஆயுர்வேத மருந்தகத்தில் கிடைக்கப்பெறும்.

இம்மரத்தின் இலை, காய், பட்டை, கோந்து போன்ற அனைத்தும் மருந்தாக உபயோகப் படுகின்றன. நாம் பலவிதமான நோய்களால் அவதிப்படுகின்றோம். அவற்றைத் தீர்க்கும் மருந்தாகவும், எவ்விதங்களில் பயன்படுகிறது என்பதைப் பற்றியும் அறிந்து கொள்வோம்.

கருவேலம் மர கோந்தினை சிறிதளவு நெய் ஊற்றி சூடுபடுத்தி, பொங்க வைத்து ஆறிய பின் சூர்ணமாக செய்து மருந்தாகப் பயன்படுத்தலாம்.

### மாதவிடாவின் போது ஏற்படும் இரத்தப் போக்கு குறைய :

நாள்தோறும் காலை, மாலை வேளைகளில் 2–3 கிராம் கருவேலம் கோந்துப் பொடியை தகுந்தளவு தேனில் கலந்து உட்கொண்டால் மாதவிடாவின் போது ஏற்படும் இரத்தப்போக்கு குறையும்.

### குழந்தை பாக்கியம் பெற :

ஆண்கள் நாள்தோறும் 3–5 கிராம் கருவேலம்கோந்தினை 3–4 மணி நேரம் நீரில் ஊற வைத்து கரைந்தவுடன், 100 மி.லி. பால், 100 மி.லி. நீர், அரை டீஸ்பூன் பனங்கற்கண்டு, ஒரு டீஸ்பூன் நெய் ஆகியவற்றை கலந்து சிறிது நேரம் கொதிக்க வைத்து, ஆறிய பின் உட்கொண்டால் குழந்தை பாக்கியம் பெறலாம்.

### மஞ்சள் காமாலை குணமாக :

நாள்தோறும் இரவு 100 மி.லி. நீரில் ஒரு டீஸ்பூன் கருவேலம் மரக்கோந்துப் பொடி, ஒரு டீஸ்பூன் சீரகம் போட்டு, காலை வடிகட்டி அந்நீரை உட்கொள்ள வேண்டும்.

### அதீத வியர்வை குறைய:

கருவேலம் இலைகளை தகுந்தளவு நீருடன் சேர்த்து மிருதுவாக அரைத்து உடலில் பூசி, காய்ந்தபின் சுரக்காய் பொடியை நீரில் கலந்து (பூசு மருந்தாக) கலவையாக தயாரித்து உடம்பில் பூசிக்கொண்டு, ஒரு மணி நேரத்திற்குப்பின் குளித்தால் அதீத வியர்வை குறையும்.

### படுக்கையில் சிறுநீர் கழித்தல் நீங்க :

ஆயுர்வேத மருந்தகத்தில் கிடைக்கும் கருவேலம் கோந்துப் பொடி, துங்கமுஸ்துலு பொடி, ஜடாமாம்சி பொடி போன்றவற்றை சம அளவில் எடுத்துக் கொண்டு இரண்டு வேளை வயதிற்கு தகுந்தளவு 1 முதல் 3 கிராம் பொடியை தேனுடன் கலந்து உட்கொண்டால் இந்த பிரச்சனை தீரும்.

### பற்பொடியாக தயாரிக்கும் முறை :

காய்ந்த கருவேலம் பட்டையை சுட்டு அதன் சாம்பலை 50 கிராம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆயுர்வேத மருந்துக் கடையில் கிடைக்கும் படிக பஸ்மி 10 கிராம், சைந்தவலவணப்பொடி 10 கிராம் ஆகியவற்றை நன்கு கலந்து வைத்துக் கொண்டு, பற்பொடியாக உபயோகித்து வந்தால் பல்லின் மேல் உள்ள காரை, பல்வலி, ஈறு வீக்கம், ஈறுகளிலிருந்து வழியும் ரத்தம், சொத்தைப்பல் ஆகிய பல் சம்பந்தப்பட்ட உபாதைகள் நீங்கும்.



**தீப்புண்ணிற்கு மருந்து :**

நாள்தோறும் 2 முறை கருவேலம்பட்டைப் பொடியை தகுந்தளவு தேங்காய் எண்ணெய் உடன் குழைத்து தீப்புண்ணின் மேல் பூசி வந்தால் எரிச்சல், வலி, புண் ஆகியவை விரைவில் குறையும்.

**கால் வெடிப்பிற்கு :**

நாள்தோறும் ஒருமுறை கருவேலம் கோந்தினை நீருடன் சேர்த்து மிருதுவாக அரைத்து பூசி வந்தால் கால் வெடிப்பு குறையும். மேலும் நெற்றியில் பூசிக் கொண்டால் தலைவலியும் குறையும்.

**பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப் படுதல் போன்ற பிரச்சனைகள் தீர :**

இளம் கருவேலம் காய்களை நன்கு இடித்து நிழலில் உலர்த்தி பொடி செய்து, அதனுடன் கற்கண்டு பொடியை கலந்து, காலை மாலை இரு வேளைகளில் அரை டீ ஸ்பூன் முதல் 1 டீஸ்பூன் அளவு வரை தகுந்த அளவு நீருடன் கலந்து உட்கொண்டால் பெண்களுக்கு ஏற்படும் பலவித பிரச்சனைகள் நீங்கும்.

**இடுப்பு வலி குறைய :**

கருவேலம் பொடி, கற்கண்டு பொடி ஆகியவற்றை 50 கிராம் அளவு கலந்து வைத்துக் கொண்டு, காலை மாலை 2 வேளைகளில், 2 கிராம் பொடியை 50 மி.லி. பாலுடன் கலந்து உட்கொள்ள வேண்டும்.

சர்க்கரை வியாதி உள்ளவர்கள் கற்கண்டு பொடியை சேர்க்காமல் உபயோகிக்க வேண்டும். இடுப்பு வலி குறையும். இவ்வாறு செய்வதால் உடைந்த எலும்புகள் விரைவில் சேரும். தசைகள் உறுதியாகவும் உடல் உற்சாகத்துடனும் காணப்படும்.

பப்புலாரிஷ்டா, லவங்காதிவடி போன்ற ஆயுர்வேத மருந்துகளின் தயாரிப்பில் இந்த கருவேலத்தை பயன் படுத்துகின்றனர்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர்வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்விற்கு அல்ல.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்,
திருப்பதி

## திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

**ஸ்வாமி புஷ்கரணி :**

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலையான் சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் தனது உடல் சுத்தத்துடன் மனசுத்தியும் ஆகிறது.

**ஆகாஸகங்கை :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**பாபவினாசம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**வைகுண்ட தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தும்புரு தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 16 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தி.தி.தே. வனத்தோட்டம் :**

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்தில் வனத்தோட்டம் வளர்க்கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

**புவியியல் வளைவு (சிலாதோரணம்) :**

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலாதோரணம் ஆலயத்தின் வடமேற்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது.

**நாதநீராஜன மண்டபம் :**

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்டபத்தில் சொற்பொழிவுகள், ஹரிகதைகள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :**

அபூர்வமான புராண பொருட்களோடு மட்டுமல்லாமல் சித்திர, சிலை கைவண்ண கலை வேலைப்பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியூஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானை தியானித்து மனதில் ஏற்பட்ட மனச்சுமைகளை குறைத்துக் கொள்ளலாம்.



# ஸ்ரீமத் பகவத்கீதை


தெலுங்கு மூலம் : திரு.கே. விஸ்வநாத சாஸ்திரி
தமிழாக்கம் : டாக்டர் சி. கோவிந்தசாமி


*சென்ற இதழின் தொடர்ச்சி...*

துரோணர் அன்றே சபதம் செய்தார். பீஷ்மர் பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் நல்ல குருவைத் தேடிக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்து அவரை அணுகி அவர் மனதை வென்று, பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் குருவானார். இவர் குருவாவதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், எப்படியாவது துருபத மஹாராஜாவைத் தோற்கடிக்கக்கூடிய வல்லமையுடைய மாணவனை உருவாக்குவதே ஆகும்.

கல்வியை அனைவருக்கும் நன்றாகப் பயிற்றுவித்தார். தன் எண்ணத்தை நிறைவேற்றக் கூடிய ஆற்றல் உடைய நபர், தன் மகன் அஸ்வத் தாமனை விட அர்ஜுனனே சிறந்தவர் என்பதை அறிந்து கொண்டார். அர்ஜுனன் இந்திரனுடைய அம்சத்தில் பிறந்தவன், மிகவும் அமைதியானவன்; விவேகம் உடையவன்; பணிவானவன்; பரிப்பக்கு வம் நிறைந்தவன். துரோணர் தான் அறிந்திருந்த அத்தனை நுணுக்கங்களையும், ஆயுதங்களைக் கையாளும் முறைகளையும் கற்றுத் தந்தார். கற்றுத் தந்த அவர் தன் கோரிக்கையை அவர்கள் முன்பு வைத்தார். இதுவே நீங்கள் குருவுக்குத் தரும் காணிக்கையாகும் என்பதையும் தெளிவு படுத்தினார்.

அவர் கோரிக்கையான, துருபத மஹா ராஜாவைத் தோற்கடித்து அவரைத் துரோணர் காலடியில் கொண்டு வந்து சேர்ப்பது. அது அவ் வளவு எளிமையான காரியம் அல்ல. முதலில் கௌர வர்கள் சென்றார்கள். அவர்களால் அச்செயலைச் செய்ய முடியவில்லை. பின்பு பாண்டவர்கள் சென்று, அவரை வென்று, பிடித்து வந்து தன் குரு காலடியில் சேர்த்தனர். அப்பொழுது, துரோணர் துருபத மஹாராஜனைப் பார்த்து ஐயா! இப்பொழுது உன் நாடு உனக்கு சொந்தமில்லை நாடு இழந்து நிற் கிறாய். நீ அரசனும் இல்லை. இந்த நாடு இப்பொழுது எனக்கு உரிமையானது. நான் என்ன செய்யப் போகி றேன் தெரியுமா? நான் உன்னிடம் நட்பு பாராட்ட விரும்புகிறேன். அதனால் என் நாட்டில் பாதியை உனக்குக் கொடுக்கிறேன்.

அப்பொழுது நீயும் அரசனாவாய், நானும் அரசனாய் இருப்பேன். இருவரும் சரி நிகர். எனவே நாம் இருவரும் நட்பு பாராட்டுவோம் என்றார். ஆனால் இவையெல்லாம் அவர் சபதத்தை நிறை வேற்ற செய்த காரியங்களேத் தவிர வேறேது மில்லை. இந்த நிலையை நினைத்து துருபத மஹா ராஜா மிகவும் வெட்கப்பட்டார்; மானக் குறைவாக எண்ணி வருத்தப்பட்டார்; அவமானம் அவரை அலைக் கழித்தது, துரோணரை எப்படியாவது பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் அவரிடம் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது.

எனவே துரோணரை வெல்லக்கூடிய மகன் ஒருவன் தனக்கு வேண்டுமென எண்ணினார். அதே நேரத்தில் அர்ஜுனன் போன்ற மாவீரன் தனக்கு மருமகனாக வேண்டும் என்றும் முடிவு செய்து கொண்டார். அதற்கு வேள்வி ஒன்றையும் செய்யத் தொடங்கினார். அதன் பலனாகத் திருஷ்டத்துய்மனும் திரௌபதியும் தோன்றினர்.

துரோணரை மாய்க்க வேண்டுமென்றால் திருஷ்டத்துய்மனுக்கு நல்ல அஸ்திரப் பயிற்சி வேண்டும். வில் வித்தையில் நன்றாகக் கற்றுத் தேர்ந்திருத்தல் அவசியம் என்று அறிந்து, தனுர் வேதத்தில் தலைசிறந்தவரான துரோணரிடமே அவரை மாணவராகக் கொண்டு வந்து சேர்த்தார். தன்னை மாய்ப்பதற்காகத் தோன்றியுள்ளவன் என்று அறிந்திருந்தும், விதியை யாராலும் வெல்ல

முடியாது என்பதை உணர்ந்து திருஷ்டத்துய்மனுக்கு எல்லா வித்தைகளையும் பரிபூர்ணமாகக் கற்றுக் கொடுத்தார்.

திருஷ்டத்துய்மனின் ஆற்றலைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், கௌரவர்கள் சேனையில் சேனாதிபதிகள் பீஷ்மர் முதலாக பலரும் மாறி மாறி போர் செய்து வர, பாண்டவர்கள் தரப்பில் திருஷ்டத்துய்மன் ஒருவனே சேனாதிபதியாக இருந்தார் என்பதிலிருந்தே அவனுடைய ஆற்றலை அறிந்து கொள்ள முடியும்.

போர்க்களத்தில் சேனாதிபதியான துரோணாசாரியாரைக் குறைக் கூறும் விதமாகப் பேசி அவருடைய மனம் வருந்தும்படி செய்கிறான் துரியோதனன். அதாவது திருஷ்டத்துய்மன் முதலில் உங்களிடம் கல்வி கற்க வரும்போது அதைத் தவிர்த்திருந்தால் இன்று இவன் உங்களைப் போர் களத்தில் எதிர்த்து நிற்க முடியாமல் செய்திருக்க முடியும். உங்கள் அறிவீனத்தால் இப்படி இன்று ஏற்பட்டிருக்கிறது. அவன் சிறந்த அறிவாளி. "தீமதா" திருஷ்டத்துய்மனுக்கு உள்ளது என்கிறான். இப்படியாக ஒரு குருவிடம் பேசலாமா? இப்படிப்பட்ட வார்த்தைகளை எந்த நேரத்திலும் எவரும் பேசக் கூடாது.

குருவிடம் செல்லும் போது மிகவும் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக் காட்டவே இந்த சுலோகத்தை பரமாத்மா இவ்விடம் வைத்துள்ளார். குருவிடம் நாம் நடந்து கொள்கின்ற முறையைப் பொருத்தே நம்முடைய எதிர் காலம் அமையும். துரியோதனனுடைய இந்தப் பேச்சே அவன் தோல்வியை உறுதிப் படுத்துகிறது. குரு என்றால் சாக்ஷாத் பரபிரம்மா. அப்படிப்பட்ட குருவை யுத்த களத்திலே அவமானிக்கப்படுவது என்பது ஏற்புடையது ஆகுமா? ஒரு கால மும் ஏற்புடையது ஆகாது.

எனவேதான் அவன், எந்த நற்பலனையும் பெற முடியாமல் தோற்றுப் போனான். ஆனால், தான் எதிர்பார்த்து வந்த பலனை, அதாவது யுத்தத்தில் வெற்றியை அர்ஜுனன் பெற்றான். அதற்குக் காரணம் ஜகத்குருவான ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை அடைக்கலமாக பெற்றான். அத்துடன் தான் என்ன செய்ய வேண்டும் என்பதையும் மிகவும் பணிவுடன் கேட்டு செயல்பட்டான். அதனால் அர்ஜுனனுக்கு வெற்றி கிட்டியது. இதன் வாயிலாக அர்ஜுனனுக்கும் துரியோதனனுக்கும் இடையே உள்ள குண நலன்களை அறிய முடிகிறது. எந்த சூழலிலும் நாம் துரியோதனனைப் போல் இருக்கக் கூடாது. இதுவே பகவத்கீதை கூறும் சத்தியமாகும். குருவிடம் மட்டுமல்ல எவரிடத்திற்கு நாம் சென்றாலும், நம் மனதில் உள்ளதை தெளிவாக ஒளிவு மறைவுஇன்றி எடுத்துச் சொல்லுதல் வேண்டும். மனதில் ஒன்று வைத்துக் கொண்டு வெளியில் ஒன்று பேசுதல் கூடாது. நாம் பேசுகின்றபோது அந்தப் பேச்சின் அர்த்தம் இரண்டு பொருளைத் தருவதாக இருக்கக் கூடாது.

அவ்வாறு இரண்டு பொருளைத் தருமாறு இருப்பின் அது நிச்சயமாகக் கேட்போரை மகிழ்ச்சிப் படுத்தும் விதமாக இருக்க வேண்டுமே தவிர, வருத்தம் தரும்படி இருக்கவே கூடாது. அப்படிப் பேசுவது என்பது துரியோதனனைப் போன்ற துர்மார்களுக்கே கை வந்த கலையாகும். இதை நாம் மனதில் வைத்து நடந்து கொள்ள வேண்டும் என்பதை பகவத்கீதை நமக்கு போதிக்கிறது.

அப்பொழுதே நல்ல பயனைப் பெற முடியும் என்பதையும் விளக்குகிறது. பரமாத்மாவின் அநுகிரகமும் ஆசிர்வாதமும் கிடைக்க வேண்டுமெனில் அர்ஜுனனைப் போன்ற பணிவை மேற்கொள்ள வேண்டும். இதை ஒரு முறை மனதில் சொல்லிக் கொண்டால் மட்டும் போதாது. பலமுறை மனதில் மனனம் செய்து கொண்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் குருபக்தி என்னும் இந்த பாவனை நம் மனதில் பதிந்து நல்வழியில் நடந்து நற்கதிப் பெறுவோம்.

குருவின் அநுகிரகம் இல்லாமல் எந்த செயலும் நற்பயனைத் தராது. குருவை அவமதிப்பவர்கள் யாராயினும் நல்ல நிலை அடைய மடாட்டார்கள். எனவே, இதை நாம் அனைவரும் மனதிலே வைத்துக் கொண்டு, வாழ்க்கையில் இதையொரு வழக்கமாக மாற்றிக் கொண்டு நல்வழியில் நடந்து நலம் பெறுவோமாக.

தொடரும்...

அலசுவோம்...... அறிவோம்.... ஆதிகாவிய நாயகர்களை......

# சாபத்தினால் பிறந்த சந்தனு மகாராஜன்



திரு. சத்யதாரா, சென்னை,
9894526302.

மஹாபாரதம் என்ற அற்புதமான இதிகாசத்தை மையமாகக் கொண்டு, எத்தனையோ திரைப் படங்கள் எடுக்கப்பட்டுவிட்டன. தொலைக் காட்சிப் பெட்டிகளில் காணும் வசதி கொண்ட தொடர்களாக அழியாத சரித்திரம் படைக்கப்பட்டுள்ளன. யுகயுகங் களாக நிலை கொண்டுள்ள இந்த அற்புத காவி யத்தை பல முனிபுங்கவர்கள், இலக்கிய மேதைகள், அறிஞர்கள் முதலிய பலர், அலசி ஆராய்ந்து ஆய்வு நூல் எழுதி மேலும் நம்மை பல கோணங்களில் சிந்திக்க வைத்து சென்று விட்டார்கள்.

மஹாபாரதம் என்ற இணையற்ற காவியம் தோன்றுவதற்கு முன் இருந்த காலம்....

அதாவது மஹாபாரதம் பெயரில் நமக்கு கிடைத்துள்ள வரலாறு. "சந்தனு" என்ற மாமன்னன் "குரு" என்ற தேசத்தை அஸ்தினாபுரத்தை தலை நகராகக் கொண்டு ஆட்சி செய்த காலத்துடன் துவங்குகிறது. அதற்கு முன் நடந்த பல நிகழ்வுகளில், ஒரு சாபம் பெற்று, அதன் விளைவாக மானிட வர்க்கத்தில் ஒரு மாமன்னனாகப் பிறந்தவனே சந்தனு. காவியத்தை துவங்கும் இந்த மன்னன் எப்படி இந்த பூவுலகில் தோன்றினான்? அவனது பின்னணி என்ன என்பதை காண்போம்.

இக்ஷ்வாகு குலத்தில் உதித்த "மஹாபிஷக்" என்ற மாமன்னன் ஆயிரம் அஸ்வமேத யாகங்களும், நூறு ராஜ சூய யாகங்களும் செய்து தேவேந்திரனை திருப்தி கொள்ள செய்தான். அதன் பலனாக மஹாபிஷக் சொர்க்கம் சென்று இன்புற்று இருந்தான்.

பிரம்ம லோகத்தில், ஒரு நாள் அனைத்து தேவர்கள், பெரும் ரிஷிகளும் கூடியிருந்த போது, கங்கா தேவி நடனமாடிக் கொண்டிருந்தாள். அந்த அவையில் மஹாபிஷக்கும் இருந்தான். பரிபூரண அழகும், சர்வ அங்க லக்ஷணங்களும் பொருந்திய கங்கா தேவியின் ஆடை காற்றினால் சிறிது விலகியது. அவளது கவர்ச்சியால் இழுக்கப்பட்ட அனைத்து ரிஷிகளும் தேவர்களும் தலை குனிந்து தங்கள் பார்வைதனை கங்காதேவியிடம் இருந்து அகற்றினர். ஆனால் மஹாபிஷக் மட்டும் கவர்ச்சியில் இருந்து மீள இயலாமல் கூச்சம் இன்றி கங்கா தேவியை நோக்கி ரசித்தவாறே இருந்தான்.

இதை கண்ணுற்ற பிரம்ம தேவர், மஹாபிஷக் மீது கோபம் கொண்டு மானிட உலகின் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்த நீ மண்ணுலகில் மீண்டும் மானிடனாகவே பிறப்பாய் என்றும், கங்கா தேவியும் பூவுலகில் தோன்றி, உனக்கு கடுமையான துன்பத்தை கொடுப்பாள். உனக்கு மனவேதனை தரும் செயல்களை தொடர்ந்து செய்வாள் என்றும்... அதை கண்டு உனக்கு எப்போது சினம் ஏற்படுகிறதோ, அப்போது கங்கா தேவியும் சாபத்தில் இருந்து விடுபடுவாள் என்றும் ஒரு கடுமையான சாபத்தினை அளித்தார். மிக்க வருத்தமுற்ற மஹாபிஷக், பூவுலகத்தில் பிறப்பதென்றால், பெருமையுடைய பிரதீபன் என்னும் மன்னனுக்கு புத்திரனாகப் பிறக்க வேண்டும் என பிரார்த்தனை செய்தான். பிரம்மனும் அதை ஏற்றார். இவ்வாறாக பிரதீபன் என்னும் மாமன்னனுக்கு "சந்தனு" என்ற புதல்வனாகப் பிறந்தான். உரிய காலத்தில் மன்னனாகி சிறப்பாக ஆட்சி நடத்தி வந்தான்.

தவம் செய்ய சென்ற பிரதீபனை கங்கா தேவி கண்டு, தான் அவனது மருமகளாக ஆகப்



போவதையும் தெரிவித்தாள். அவனது ஆசியையும் பெற்றாள். பிரதீபனும் ஆதவனுக்கொப்பான சந்தனு என்ற தனது மகனிடம், தன்னிடம் தேவலோகத்தில் இருந்து வந்து ஒரு கன்னிப்பெண் தனது மருமகளாக வேண்டும் என்று ஆசி பெற்று சென்று இருக்கிறாள். அவளை நீ சந்திக்க நேரும் போது யார் நீ என்ற ஒரு விசாரணையும் செய்யாதே. அவள் எந்த காரியத்தை செய்தாலும் அது பற்றி எதுவும் கேட்க வேண்டாம். அவளை நீ ஏற்றுக்கொள் என்றும் அறிவுரை கூறினான்.

ஒரு நாள் சந்தனு வேட்டைக்குச் செல்கையில் கங்கை நதிக்கரையில் பூர்ண தேஜசுடன் கங்கா தேவி அவ்விடம் வந்து சந்தனு முன் நின்றாள். நீராடி விட்டு மேனி எழில் கொஞ்ச தனது கூந்தலை அவிழ்த்து ஆற்றிக்கொண்டு நின்றாள். அவளை கண்ணுற்ற சந்தனுவோ, அவளது கவர்ச்சியை கண்டு தன்னிலை மறந்தான். அவளிடம் சென்று தனது தந்தையின் கட்டளையும் நினைவு கூர்ந்து அழகிய பெண்ணே, நான் சந்தனு மகாராஜன். நீ யாரென்று தெரிய வில்லை. நீ ஒரு கந்தர்வ பெண்ணா? அல்லது யக்ஷ குல பெண்ணா? அல்லது நாக லோக கன்னியா? நீ யாராக இருந்தாலும் என் மனைவியாக வேண்டும் என்று தனது ஆசையை கூறினான். கங்கா தேவியோ தான் யாரென் றும் கூறாமல், மன்னா உன் விருப்பத்தை ஏற்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை உள்ளது. நான் என்ன செய் தாலும் என்னைப் பற்றியோ என் நடவடிக்கைகளை பற்றியோ நீயோ அல்லது உன்னை சேர்ந்தவர் களோ எந்த கேள்வியும் கேட்கக் கூடாது. நிபந்த னையை மீறி என்னை வினவினால் அந்த க்ஷணமே உன்னை விட்டு போய் விடுவேன் என்றாள். அவ ளின் மீது இருந்த மோகமும் தந்தையின் அறிவுரை யும் அவனை அந்த நிபந்தனையை ஏற்கச் செய்தன.

தனது தேரில் அவளை அஸ்தினாபுரத்திற்கு அழைத்து சென்று, மணந்து கொண்டு, மகிழ்வாக பல நாட்கள் வாழ்ந்து கொண்டு இருந்தான். கங்கா தேவி கர்ப்பமுற்றாள். தேவகுமாரனுக்கொப்பாக ஒரு குழந்தையை ஈன்றாள். ஈன்றவுடன் அக் குழந்தையை கழுத்தை இறுக்கி கங்கை நதியின் பிரவாகத்தில் இட்டு அதன் வாழ்வை முடித்தாள். உள்ளம் பதறி நின்றான் சந்தனு. ஆனால் நிபந்த னையை மீறி எந்த கேள்வியும் கேட்க இயல வில்லை. மனம் துடிதுடித்துக் கொண்டு நாட்களை தொடர்ந்தான். இவ்வாறாக ஏழு முறைகள் கர்ப்பமுற்று, ஈன்று உடனே அனைத்துக் குழந்தை களையும் நதியில் மூழ்கடித்து கொன்றாள்.

எட்டாவது முறை கர்ப்பம் தாங்கினாள். குழந்தை பிறந்தது. அதையும் கொல்ல முயற்சிக் கும் போது சந்தனுவால் பொறுக்க இயலவில்லை. இந்த கொடுமையை தடுத்தே ஆக வேண்டும் என்று முடிவு செய்தான். தனது மனைவியிடம் யார் நீ? ஏன் இப்படி தொடர்ந்து கொடுமைகளை செய்த வண்ணம் இருக்கின்றாய். தாங்கவொணா துயரத் திற்கு என்னை ஏன் இவ்வாறு ஆளாக்குகிறாய்? ஏழு குழந்தைகளை கொன்று விட்டாய். இனியா வது இந்த எட்டாவது குழந்தையை கொல்லாதே. இதையாவது வாழ விடு என்று கெஞ்சினான்.

இந்த தருணத்தை எதிர்ப்பார்த்து இருந்த கங்கா தேவி, மன்னா, இனி நான் உன் குழந்தையை கொல்ல மாட்டேன். உன்னுடன் இனி வாழவும் மாட்டேன். உன்னை விட்டு நீங்குகிறேன். விடை பெறுகிறேன். இப்போது நான் யாரென்று கூறுகிறேன். ஏன் முதலில் பிறந்த ஏழு குழந்தை களையும் பிறந்த உடனே கொன்றேன் என்ற விவரங்களையும் கூறுகிறேன். அறிந்து கொள்வா யாக என்று முன் ஜென்மத்தில் சந்தனு, மஹாபிஷக் என்ற பெயரில் ஸ்வர்க்க லோகத்தில் இருந்தத னையும், சாபம் பெற்ற விவரங்களையும் கூறி

எட்டாவது குழந்தையை வளர்த்து பாலகனாக்கி சகல அஸ்திர சாஸ்திர வித்தைகளையும் பயிற்றுவித்து, மீண்டும் உன்னிடம் ஒப்படைத்து விடுவேன் என்று கூறி விடைபெற்றாள். அவ்வாறே பருவம் எய்திய பாலகனை "தேவ விரதன்" என்று பெயரிட்டு சகல வித்தைகளையும் பயிற்றுவித்து, சந்தனுவிடம் ஒப்படைத்து விடுகிறாள்.

மட்டற்ற மகிழ்ச்சி கொண்ட சந்தனு மகாராஜன் தேவ விரதனை அஸ்தினாபுரத்தின் இளவரசனாக பட்டாபிஷேகம் செய்து வைக்கிறான். சில நாட்கள் கழிந்தன. ஒரு முறை யமுனா நதிக்கரையில், ஒரு மீனவனின் வளர்ப்பு மகளாக படகு செலுத்தி வரும் பரிமளகந்தி என்ற பெண்ணைக் கண்டு அவளது உடலில் இருந்து வீசிய அற்புத சுகந்தமான வாசத்தினை கண்டு மயங்கி, வியந்து அவளை மனைவியாக அடைய வேண்டி அவளது வளர்ப்பு தந்தையான மீனவனை அணுகினான்.

அவனோ தனது மகளின் வயிற்றில் பிறக்கும் புத்திரனுக்கு இளவரசனாகப் பட்டாபிஷேகம் செய்து வைப்பதாக இருந்தால் மணம் செய்து தருவதாக கூறுகிறான். ஏற்கனவே தேவவிரதனுக்கு இளவரசனாக பட்டாபிஷேகம் செய்து வைத்து இருந்த படியால், மீனவன் நிபந்தனையை எதிர்கொள்ள இயலாமல் ஏமாற்றத்துடன் திரும்பினான் சந்தனு மகாராஜன்.



தந்தையின் ஏமாற்றத்திற்கு என்ன காரணம் என்பதை கண்டறிந்த தேவவிரதன், மீனவனைக் கண்டு அவனது அவா நிறைவேறும் வகையில் மிகக்கடுமையான ஒரு சபதம் செய்தான் "தான் ஒரு போதும் மன்னனாக மாட்டேன். மேலும் ஆயுள் முழுவதும் பிரம்மச்சாரியாகவே வாழ்ந்து அஸ்தினாபுரத்தின் அரியணையை காத்து வருவேன்" என்பதே அவன் சாரம்.

பின்னாளில் பரிமள கந்தியை மணந்து கொள்கிறான். பரிமளகந்தி, சத்யவதி என்ற பெயரில் அஸ்தினாபுரத்தின் மகாராணியாகிறாள். சந்தனுவுக்கும் சத்ய வதிக்கும் சித்ராங்கதன் மற்றும் விசித்திர வீர்யன் என்ற இரு புத்திரர்கள் பிறந்தனர். புத்திரர்கள் வாலிபப் பருவம் எய்தும் முன்னரே சந்தனு மகாராஜன் முதுமை காரணமாக மரணமடைந்து ஸ்வர்க்க லோகம் ஏகினான்.

சந்தனு என்ற பெயரில் மஹாபாரத காவியத்தை துவக்கி வைக்கும், மாமன்னனின் குடும்பத்தில் காணப்படும் ஒவ்வொரு இதிகாச கதாபாத்திரங்களைப் பற்றியும், வரும் இதழ்களில் தனித்தனியாக அலசவிருக்கிறோம் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம்.



## ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம் -28

*ஸுகத: க்ரியதே ராமாபோகஹ்:*
*பச்சாத் அஹந்த சரீரே ரோக: |*
*யத்யபி லோகே மரணம் சரணம்*
*ததபி ந முஞ்சதி பாபாசரணம் ||*

**உலகில் சுகமாக இருக்கிறதென்று (நெறி தவறி) பெண்ணோடு ஆர்வத்துடன் கூடுகிறான். அதன் காரணமாக (பின்னாட்களில்) பலவித நோய்களுக்கு ஆளாகிறான். மரணம் என்பது தவிர்க்க முடியாதது, என்ற உண்மை தெரிந்தும், பாவம் செய்வதை (இது போன்ற நெறி தவறிய) பாவங்கள் செய்வதை யாரும் விடுவதில்லை....! (நெறியான கர்மாக்கள் மட்டுமே ஒருவனை கடைசி காலத்தில் காப்பாற்றும் மற்றவை நோய் முதலிய துன்பங்களுக்கு ஆளாக்கி விடும்.)**

**- திரு. சீதாராமன், சென்னை.**

நீதிக்கதைகள்

# தெய்வச் செயலின் சிறப்பு



திருமதி பிரேமா வரதன்,
புதுதில்லி, 98997 13565

ஒரு நகரத்தில் உள்ள ஒரு குடும்பத்தில் 6 வயது நிரம்பிய சிறுவனுக்கு காய்ச்சல் உண்டாயிற்று. இரண்டு மைல் தூரத்தில் இருக்கும் வைத்திய சாலைக்குப் பையனை அழைத்துக் கொண்டு போகலாம் என்றாலோ இரவு சூழ்ந்து கொள்ள நல்ல மழை. மூத்த குமாரனை அழைத்து நோயின் தன்மையைச் சொல்லி மருந்து வரவழைக்க ஏற்பாடு செய்தார் தந்தை. அவனும் மிக வேகமாக டாக்டரிடம் சென்றான். டாக்டர் மருந்துச் சாலையில் தமக்கு உற்ற பெரிய மனிதர்களோடு பேசிக் கொண்டிருந்தார்.


அச்சமயம் இச்சிறுவன் சென்று செய்தியைத் தெரிவித்ததும் சிறுவனின் வேண்டுகோளைக் கேட்காமல் இப்போது முடியாது காலையில் வா என்று கூறினார். டாக்டர் இப்படி கூறுவதைக் கேட்ட சிறுவனுக்கு அழுகையே வந்து விட்டது. ஐயா! நான் மழையையும் பொருட்படுத்தாமல் இவ்விரவு நேரத்தில் 2 மைல் தூரத்திலிருந்து வந்திருக்கிறேன். இந்நேரத்தில் வேறு வைத்ய சாலை எங்கு திறந்திருக்கிறது என்பதும் தெரியாது. நீங்கள் மருந்து தராவிடில், என் அருமைத் தம்பியை இழுந்து விடுவேனோ என்று நினைக்கவே குலை நடுக்கமாயிருக்கிறது.

தயவு செய்து இச்சீட்டில் குறிப்பிட்டிருக்கும் நோயின் தீவீரத்தை படித்து அதற்கேற்ப மருந்து தாருங்கள் என்று அழுது கொண்டே பணமும், மருந்துச் சீட்டையும் மேஜை மேல் வைத்துக் கும்பிட்டான். அப்பொழுது கூட டாக்டருக்கு இரக்கமே வரவில்லை. நாளை வா என்று சொல்லிக் கொண்டு மற்றவர்களிடம் பேசிய வண்ணமே இருக்கிறார். இன்னது செய்வதென்று தெரியாத சிறுவனும் டாக்டரின் காலைப் பிடித்துக் கொண்டு கதறுகிறான்.

இதைக்கண்ட டாக்டரின் நண்பர்கள் முதலில் அச்சிறுவனுக்கு வேண்டிய மருந்தைக் கொடுத்து விடுங்கள். அவனைப் பார்த்தால் பாவமாயிருக்கிறது. நாங்கள் காத்திருக்கிறோம் என்று சொன்னதன் பேரில் டாக்டரும் அந்த சீட்டை சரியாக கவனிக்காமல் ஏனோ தானோ வென்று சில மருந்துகளைக் கூட்டி சீஸாவில் கொட்டி சிறுவனிடம் கொடுத்தனுப்பினார். சிறுவனும் டாக்டருக்கு நன்றி தெரிவித்து வீடு திருப்பினான்.

சிறிது நேரத்திற்குப் பின் டாக்டருடைய கையில் வலி எரிச்சல் எடுத்தது. உடனே எந்த மருந்துகளைக் கலந்து கொடுத்தோம் என்று கவனிக்கத் துவங்கினார். ஆனால் அந்நோயிற்கான மருந்தல்லாமல் அதற்கு விஷம்என்று சொல்லும்வண்ணம் மருந்தை அல்லவா தந்திருக்கிறோம். ஐயோ! இந்த மருந்தை உட்கொண்ட மறு நிமிடமே குடல் வெந்து உயிர் போய் விடுமே! சிறுவனோ வேகமாகச் சென்று விட்டானே! என்று டாக்டர் கதறுகிறார். சிறுவன் சென்ற வழியில் கால் வழுக்கி கீழே விழுந்து சீசாவும் உடைய, டாக்டரிடம் திரும்பி வந்து நடந்ததை சொல்லி அழுதான். இதைக் கேட்ட டாக்டரும் ஆனந்தமாக தெய்வத்தை போற்றியப்படி சரியான மருந்தினை கொடுத்து இச்சிறுவனை தனது காரில் அமர்த்திக் கொண்டு அவன் வீட்டிற்கேச் சென்று போது மான சிகிச்சையை இலவசமாக செய்து விரைவிலே அச்சிறுவனை குணப்படுத்தினார்.

**நீதி :** செய்யும் தொழிலே தெய்வமென்றிருக்க வேண்டும். அதில் தவறு செய்து விட்டால் அதற்கு பிராயச்சித்தமும் பண்ணவேண்டும்.


ஸ்ரீவாமன திருஅவதாரம்
சித்திரக் கதை
கதை மூலம்: டாக்டர் அல்லாடி சந்தியா
சித்திரம் : திரு. கே. துளசி பிரசாத்
1 குருவின் ஆசியுடன் பலிசக்கரவர்த்தி இந்திரப்பதவியை பெற்றது மட்டுமின்றி, அஸ்வமேதயாகம் நடத்தவும் எண்ணினான். பலி சக்கரவர்த்தி தன் குருவான சுக்ராச்சாரியரிடம் ...
2 குருதேவா! என் யாகம் எவ்வித தடங்களுமின்றி நடைபெறுமா?
குழந்தாய்! அனைவரின் அருளையும் பெற்று பலரை வென்றுள் ளாய். உனக்கு தோல்வியே கிடையாது. 3
கேட்போருக்கு இல்லை எனக் கூறாமல் தானம் செய்கின்றாய். இது பாராட்டுக்குரியதல்லவா! 5
6 குருவே! தங்கள் இன்னருள் பலத்தால் இது நடைபெறுகின்றது.
யாகத்தின் வாயிலாக பலி சக்கரவர்த்தி தனது தான குணத்தை காட்ட விரும்பினான். 4
இந்த யாகம் குறித்து அறிந்த இந்திரன் தன் தாயான அதிதியிடம் முறையிட்டார். 7
8 அன்னையே! பலி சக்கரவர்த்தியிடம் இருந்து என்னைக் காப்பாற்றுங்கள்.
மகனே! நம்மனைவருக்கும் துணைஸ்ரீமந் நாராயணனே. அவரிடம் சென்று முறையிடுவோம். 9
10 பிரம்மாதி தேவதைகளுடன் அதிதியும் ஸ்ரீமந்நாராயணனை பிரார்த்தித்தாள்
தேவாதிதேவா! 11 ஸ்ரீமந்நாராயணா
பாகிமாம்! காத்திடுங்கள்
அப்பொழுது ஸ்ரீமந்நாராயணன் தான் அவதரிப்பேன் அதிதியின் கர்ப்பத்தில் என்றார் 12
13 வாமனனாக அவதரித்த ஸ்ரீமந்நாராயணனுக்கு அதிதி கஸ்யபர் உபநயன சடங்குகளைச் செய்தனர்.



14
பலிசக்கரவர்த்தி யாகம் செய்வதனை அறிந்த வாமனர், இந்திர பதவியை பெற்ற பலி சக்கரவர்த்தியிடம் சென்றார். வாமனரை கண்ட பலிசக்கரவர்த்தி அவரை வரவேற்று, அவரிடம்...
தங்களுக்கு என்ன வேண்டும்? 15
16 சக்கரவர்த்தி! வந்திருக்கும் பாலகன் வாமனன் அல்ல! ஜாக்கிரதை! என்றார் சுக்ராச்சாரியார்
17 சக்கரவர்த்தி! நான் பிரம்மச்சாரி; நான் இருப்பதற்கு எனக்கு மூன்று அடி நிலம் வேண்டும்
18 அப்படியே தருகிறேன் என்று கூறி நீர் நிறைந்திருக்கும் கமண்டலத்தை சக்கரவர்த்தி எடுத்தான். இதனை கண்ட சுக்ராச்சாரியார் வண்டாக மாறி கமண்டலத்தின் துவாரத்தை அடைத்துக்கொண்டார்.
19 வாமனர் தர்பையால் துவாரத்தில் குத்தி நீர் வெளியே வர வழி செய்தார்.
20 பிரம்மச்சாரியே! மூன்றடி நிலத்தை தானமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்
21 அப்பொழுது வாமனர் ஓரடியில் பூமியையும் இரண்டாவது அடியில் வானத்தையும் அளந்து...
22 சக்கரவர்த்தி மூன்றாவது அடியை எங்கே வைப்பது?
23 வந்திருப்பது ஸ்ரீமந் நாராயணனே என்பதை அறிந்து பலிசக்கரவர்த்தி
24 ஸ்வாமி! 3 வது அடியை என் தலை மீது வையுங்கள்!
25 அப்பொழுது அவன் தலை மீது 3வது அடியை வைத்து பகவான் மகாபலியை பாதாள லோகத்திற்கு அனுப்பினார்.
26 இதனை கண்ணுற்ற அனைத்து லோக வாசிகளும் வாமனரை பல வாறு துதித்துப் போற்றினர்.
முற்றும்.

## பல்சுவை பகுதி

1. பாரளந்தான் என்று போற்றப்படுபவர் யார்?
   அ) வராகர்  ஆ) வாமனர்  இ) வேங்கடவன்
2. கோதா சதுச்லோகி இயற்றியவர் யார்?
   அ) அனந்தாழ்வான் ஆ) ஆளவந்தார்  இ) இராமாநுஜர்
3. உய்யக்கொண்டார் பிறந்த நட்சத்திரம் எது?
   அ) ரோகிணி  ஆ) கார்த்திகை  இ) மகம்
4. முதலாழ்வார்கள் சந்தித்த திவ்யதேசம் எது?
   அ) திருக்கோவலூர் ஆ) திருவரங்கம்  இ) திருவெஃகா
5. திருசந்தவிருத்தம் அருளிய ஆழ்வார் யார்?
   அ) திருமழிசைபிரான்ஆ) நம்மாழ்வார்  இ) ஆண்டாள்

**விடைகள்**
1) ஆ, 2) அ, 3) ஆ, 4) அ, 5) அ

### பொருத்துக...

| | | |
|---|---|---|
| 1. நாசிக் | - | அ. ஹரிலக்ஷ்மி |
| 2. திருவனந்தபுரம் | - | ஆ.ஸ்ரீவராகர் |
| 3. சந்தனு | - | இ. மீனாட்சி |
| 4. மதுரை | - | ஈ. பஞ்சவடி |
| 5. ஸ்ரீமுஷ்ணம் | - | உ. பீஷ்மர் |

1.ஈ, 2.அ, 3.உ, 4.இ, 5.ஆ.



### தெரிந்து கொள்ளலாமே...

"ஓம் நமோ நாராயணாய"
"ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே
ஸ்ரீமதே நாராயணாய நம:"
"சர்வதர்மாந் பரித்யஜ்யமாமேகம் சரணம் விரஜ।
அஹம் த்வா சர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச॥"

சரணாகதியின் இயல்பினையும் அதனை மேற்கொள்ளும் முறையினையும் மேற்கூறிய மூன்று மந்திரங்கள் விளக்குகின்றன.

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...


கண்கள் காணாவே என்  கண்ட அமுதினைக் மற்றொன்றினைக்

என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



### விடுகதை பகுதி...

1. கடலில் கலக்காதது. குடிக்கவும் இயலாதது...
2. ஒரு அரண்மனையில் 32 காவலர்கள்...
3. பற்கள் இருந்தாலும் கடிக்க இயலாதது...

1.கண்ணீர், 2. பற்கள்
3. சீப்பு

Printed by Sri P. Ramaraju, M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Published at Tirupati – 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.





11-08-2021 அன்று திருமலையில் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவராக திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் பதவியேற்றார். ஸ்வாமி தரிசனத்திற்குப்பின் அவருக்கு ஸ்வாமி சித்திரப்படத்தை வழங்கும் தி.தி.தே.செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்களுடன் கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ்.திருப்பதி இணைச்செயலாட்சித்தலைவர் திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். மற்றும் சந்திரகிரி சட்டமன்ற உறுப்பினரும் திருப்பதி துடா தலைவருமான திரு. செவிரெட்டி பாஸ்கர்ரெட்டி அவர்கள்





20-08-2021 அன்று திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயத்தில் வரலக்ஷ்மி விரத பூஜையில் பங்கு கொண்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி தம்பதியினர். இவ்வாலயத்தில் துலாபார சேவையை துவக்கி வைக்கும் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவ் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி, தி.தி.தே.செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ்., கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ்.திருப்பதி இணைச்செயலாட்சித்தலைவர் திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள்






30-08-2021 அன்று ஸ்ரீகிருஷ்ணாஷ்டமியை முன்னிட்டு ஸ்வாமி நவநீத சேவை துவக்க விழாவின் ஒரு பகுதியாக வெண்ணை ஊர்வலத்தில் பங்கு கொண்ட தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள். நவநீத சேவையில் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத்தலைவர், தி.தி.தே.செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ்., அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY
Published by Tirumala Tirupati Devasthanams
Printing on 25-08-2021

